‘பதற்றம்’
எண்ணமும் எழுத்தும்
ரா.ப.ஆனந்தன்

# ஆப்பிரிக்கா தமிழ்ச்சாரல்

புதுத்தமிழ் 4 குளிர்ச்சாரல் 5 தனிச்சுற்றுக்கு திருவள்ளுவர் ஆண்டு 2057 புரட்டாசி



## தடகளத்தில் தடாலடி சாதனை: வித்யா ராம்ராஜ்

## முத்தான 3 பதக்கங்கள்




COMPLETE ERP

# Axpert Shop

Finance · Inventory · Importation · Fixed Assets
AI Reports · Offline-first · Cloud Ready

**Dual Currency — CDF & USD**
Every report, P&L and balance sheet in both currencies simultaneously

**Offline-first Distributed System**
Each shop runs independently. RabbitMQ sync when connectivity resumes

**Cloud Ready & Mobile**
Deploy on AWS, Azure or GCP. Live KPI dashboards on any device

RABBITMQ · .NET · ORACLE DB · CLOUD-NATIVE · AI / LLM

SEND INQUIRY
vishwa@axpertdrc.com

Axpert DRC
www.axpertdrc.com

CORE MODULES

### Finance
- Journal entries & audit trail
- Fund transfer & transit cash
- Shop-wise P&L & currency revaluation

### Inventory
- Receipt, issue & dual-leg transfer
- Mobile physical count + barcode
- Stock aging analysis

### Local Purchase
- Indent → PO → GRN Cum Bill
- Cash purchase & purchase return
- Multi-currency purchasing

### Importation
- Proforma → License → Shipment
- Landed cost: CBM / Weight / Value
- Real-time tracking & FOB history

### Fixed Assets
- SLM & reducing balance depr.
- Inter-branch transfer & disposal
- Audit-ready asset register

### Reports & Analytics
- All reports in CDF & USD
- Shop-wise drill-down & aging
- Financial statements on-demand

### Integrated AI Reporting
NEW

# ஆப்பிரிக்கா தமிழ்ச்சாரல்

## ஆசிரியர் குழு




இராசகுரு கார்பாலன் — முதன்மை ஆசிரியர்

நாச்சியார் — பொறுப்பாசிரியர்






சித்து — துணை ஆசிரியர்

கொ.மா.கோ.இளங்கோ — துணை ஆசிரியர்

சௌந்தரராஜன் — துணை ஆசிரியர்

திம்மராஜன் — துணை ஆசிரியர்





ரா.ப.ஆனந்தன் — துணை ஆசிரியர்

குரு.கல்யாணசுந்தரம் — துணை ஆசிரியர்

விசாகன் — துணை ஆசிரியர்

**ஆப்பிரிக்கா தமிழ்ச்சாரல் - மாத இதழ் - படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி**

*tamilcharal.africa@gmail.com*    Africa Tamilcharal யுடியூப் சேனலைப் பின்தொடர்க!


*Africa Tamilcharal*

*No.10, Avenue des Commerce, Building Rivera, Appt No. 407*

*Commune de la Gombe, Kinshasa, D.R.Congo.*



**பொறுப்புத் துறப்பு:** ஆப்பிரிக்க தமிழ்ச்சாரல் இதழில் வெளிவருகின்ற படைப்புகள் மற்றும் கட்டுரைகள், புகைப்படங்கள் போன்றவற்றின் வழியாகச் சொல்லப்படுகின்ற கருத்துகள் வைக்கப்படுகின்ற பாத்திரங்கள் மற்றும் முடிவுகளுக்கு அந்நந்த படைப்பாளர்களே பொறுப்பாவார்கள். விமர்சனங்கள் மற்றும் ஆட்சேபனைகளுக்கு ஆப்பிரிக்க தமிழ்ச்சாரல் இதழ் எந்த வகையிலும் பொறுப்பேற்காது என்பதை அறியவும்.




# தமிழ் வணக்கம்



அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்மன்னி
அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே!
திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே!
எண்தொகையே!
நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே!
மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
சிந்தா மணிச்சுடரே!
செங்கைச் செறிவளையே!
தந்த வடமொழிக்கும் தாயாகி நின்றவளே!

# தலையங்கம்

அன்புத்தமிழ் உறவுகளுக்கு வணக்கம்,

மனித நாகரிகத்தின் விடியலில் தொடங்கிய ஆன்மீகத் தேடல், கற்காலத்து நடுகற்களில் தொடங்கி இன்று எண்ணற்ற மதங்கள், தத்துவங்கள் மற்றும் நவீன ஈர்ப்பு விதி (*Law of Attraction*) வரை நீண்ட நெடிய பாதையைக் கடந்துள்ளது. மனிதனின் உயிர்வாழும் அச்சமும், இயற்கையின் மீதான வியப்பும் இந்த வளர்ச்சிக்கு மூலதனமாக அமைந்தன.

கற்காலம் மற்றும் சங்க காலத்தில் நடந்த போரில் தன் நாட்டைக் காத்து உயிர்நீத்த பல வீரர்களின் நினைவாக நடுகல் (*Hero Stone*) நடப்பட்டு வணங்கப்பட்டது. இதுவே தமிழர்களின் மிகத் தொன்மையான மூதாதை மற்றும் தெய்வ வழிபாட்டின் தொடக்கப் புள்ளியாகும். இறந்தவர்களின் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதன் மூலம் இளையோருக்கும் வரும் தலைமுறையினருக்கும் அகத்தூண்டலாக திகழவேண்டும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதே நடுகல் வழிபாடு. அதுவே நீத்தார் வழிபாட்டில் முதன்மை பெறுகிறது.

இதனோடு சில கேள்விள் சேர்ந்து,

இங்கே ஒரு சிந்தனைப்புரட்சிக்கு வித்திட்டது, மனிதன் இயற்கையைப் புரிந்து கொள்வதற்கு முயன்றபோது மெய்யியல் (*Philosophy*) பிறந்தது.

இந்தியாவில் சாங்கியம், யோகா, வேதாந்தம் போன்ற , சிந்தனைகளும் மனிதனை பிரபஞ்சத்துடன் இணைக்க




முயன்றன. "நான் யார்?" என்ற முக்கிய வினா ஆன்மீகச் சிந்தனைகளின் மையமானது.

இயற்கை சக்திகள் ( மழை, நெருப்பு, காற்று) காலப் போக்கில் உருவங்களாகவும், தெய்வங்களாகவும் மாறின.

ஒழுக்க நெறிகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும், வாழ்வியல் நெறிகளையும் வழங்க பௌத்தம், சமணம், சைவம், வைணவம், கிருத்துவம் மற்றும் இசுலாம் போன்ற மாபெரும் மதங்கள் தோன்றின.

தத்துவங்களை எளிய மக்களிடம் கொண்டு சேர்க்கவும், நல்வழிப்படுத்தவும் புராணங்களும் இதிகாசங்களும் உருவானவை.

தத்துவங்களை எளிய மக்களிடம் கொண்டு சேர்க்கவும், நல்வழிப்படுத்தவும் புராணங்களும் இதிகாசங்களும் உருவானவை.

"நாம் எதை நினைக்கிறோமோ அதுவாகிறோம்" என்ற தத்துவத்தின் நவீன வடிவே ஈர்ப்பு விதி.

பழங்காலத்தில் இயற்கையை நோக்கி கைகூப்பிய மனிதன், இன்று தன் சொந்த மனதின் ஆற்றலையும் எண்ணங்களின் அதிர்வுகளையும் பிரபஞ்சத்துடன் இணைத்து வெற்றியை ஈர்க்க முடியும் என்ற நிலைக்கு பரிணாமம் அடைந்துள்ளான்.

கற்காலத்து நடுகல்லில் தொடங்கிய மனிதனின் ஆன்மீகப் பயணம், இன்று இந்த பிரபஞ்ச சக்தியைத் தன்னுடைய மனதால் ஈர்க்கும் நவீனம் வரை வளர்ந்துள்ளது.

வழிபாட்டு முறைகள் மாறினாலும், மனிதனின் பாதுகாப்பு, அமைதி மற்றும் மேம்பாடு என்கின்ற தேடல் மட்டும் மாறாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகெங்கும் பல நூற்றாண்டுகளாக உருவாகியுள்ள மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கான பல தத்துவங்களுடன் இணைந்து அவற்றில் பயனுள்ளவற்றை எடுத்துக்கொண்டு சமகால தலைமுறையினர் மேற்கொள்கின்ற 'தேடுதல்' என்கிற கலை அடுத்து வருகின்ற சந்ததியினரின் மேம்பட்ட வாழ்விற்கு வழி வகுத்து வருகிறது.

**நன்றி, வெல்க தமிழ்!**
**இராசகுரு கார் பாலன்**

# திரைச்சாரல்

மதுரை மு.அன்புச்செல்வன்

இயக்குநர் லோகேசு கனகராசு ஒரு முழுமையான கதா நாயகனாகக் களத்தில் இறங்கி, அருண் மாதேசுவரன் இயக்கத்தில் சன் பிக்சர் தயாரிப்பில் வெளிவந்த 'DC' *(Devadas & Chandra)* திரைப்படம் தமிழ் சினிமா உலகில் ஒரு முக்கியமான விவாதப் பொருளாகவும், கவனிக்கத் தக்க பரிசோதனை முயற்சியாகவும் அமைந்திருக்கிறது. வணிக ரீதியான பிரம்மாண்ட சினிமாக்களையும், தனது சொந்த சினிமா பிரபஞ்சமான LCU-வையும் *(Lokesh Cinematic Universe)* இயக்கிவரும் லோகேசு, இந்த முறை கேமராவுக்குப் பின்னால் இருப்பதை விட்டுவிட்டு, முற்றிலும் மாறுபட்ட ஒரு ராவான *(Raw and Gritty)* கேங்சிடர் கதைக்களத்தில் நடிகராகத் த_ன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது சினிமா ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இப்படத்தில் 'தேவதாசு' என்ற கதாபாத்திரத்தில் லோகேசு நடித்துள்ள விதம் மிகவும் இயல்பாக அமைந்துள்ளது. வழக்கமான தொழில்முறை கதாநாயகர்கள்குரிய திமிர், அதீத உடல் மொழி அல்லது பன்ச் டைலாக்குகள் போன்ற வற்றுக்கு இடமளிக்காமல், அருண் மாதேசுவரனின் உலகத்திற்கு எது தேவையோ அதைத் துல்லியமாக வழங்கியுள்ளார்.

இயக்குநர் அருண் மாதேசுவரன் தனது முந்தைய படங் களான 'ராக்கி', 'சாணிக் காய்கீதம்' மற்றும் 'கேப்டன் மில்லர்' வரிசையில், இப்படத்திலும் வன்முறை, விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வியல், ரத்தம் தெறிக்கும் பழி வாங்கல் மற்றும் அதிகாரம் பற்றிய தனது தனித்துவமான பார்வையைப் பதிவு செய்துள்ளார்.

தேவதாசு மற்றும் சந்திரா இடையேயான காதலும், அதையொட்டிய விசுவாசமும் கதையின் அடிப்படையாக இருந்தாலும், அது இறுதியில் எப்படி கோரமான வன்முறைச் சுழலில் மாட்டிக்கொள்கிறது என்பதை இப்படம் விரிவாகப் பேசுகிறது.

தொழில்நுட்ப ரீதியாக, இப்படத்திற்கு அனிருத்தின் பின்னணி இசையும், *'The Raga of Revenge'* போன்ற இசைக்கோர்ப்புகளும் மிகப்பெரிய பலமாக அமைந் துள்ளன. காட்சியமைப்புகளில் அருண் மாதேசுவரனின் கலை நயமும், கேமரா கோணங்களும் படத்தின் வீச்சைக் கூட்டியுள்ளன.

வாமிகா காபியின் நடிப்பானது கதையோட்டத்திற்குச்




சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளது. அதே சமயம், வழக்கமான லோகேசு படங்களின் துரிதமான திரைக் கதை இதில் இல்லை என்றும், இரண்டாம் பாதியில் படத்தின் வேகம் சற்று மந்தமடைவதாகவும் சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இதுவொரு வழக்கமான வார இறுதிப் பொழுதுபோக்குத் திரைப் படமாக இல்லாமல், சினிமா மீதான காதலுக்காக ஒரு முன்னணி இயக்குநர் தனது பிம்பத்தை தகர்த்துக் கொண்டு தன்னை ஒரு ராவான படைப்பாளிக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தற்கான தகுந்த சான்றாகவே பார்க்கப்படுகிறது.




# பதற்றம்

ஒரு மனிதன் எப்போது அளவுகடந்த பதற்றமடைகிறான் அல்லது அதிர்ச்சி கலந்த அச்சம் அடைகிறான் என்றால், அது இரண்டு வகையான சூழ்நிலைகளில் ஏற்படலாம். முதல் வகை என்னவென்றால், அவன் வாழ்க்கையில் பல்வேறு வகையான அழுத்தங்கள் மெதுவாக சேர்ந்து கொண்டே இருக்கும்.

அந்த அழுத்தங்களை அவன் ஆரம்பத்திலேயே சரியாக கையாளாமல், "பிறகு பார்த்துக்கலாம்" என்று ஒத்திவைத்து விடுவான்.

அது உடல் நலம் சார்ந்த பிரச்சனையாக இருக்கலாம், பொருளாதார பிரச்சனையாக இருக்கலாம், அல்லது மனநிலை சார்ந்த பிரச்சனையாக இருக்கலாம்.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்து கொண்டிருக்கும் அந்த அழுத்தம், ஒரு கட்டத்தில் "கொதிநிலையினை " *(boiling point)* அடையும். அந்த நேரத்தில் அவனால் அதை தாங்க முடியாமல், சமாளிக்க முடியாமல், நிதானத்தை இழந்து வித்தியாசமாக நடந்து கொள்வான். அவன் எடுக்கும் முடிவுகள் அவனை மட்டும் அல்லாமல், அவனைச்சுற்றியுள்ளவர்களையும், அவனுடன் தொடர்புடைய வர்களையும், தொடர்பில்லாதவர்களையும் பாதிக்கும். இது ஒரு வகையான நிலை.

இன்னொரு வகை என்னவென்றால், எந்த பிரச்சனை யையும் சந்திக்காமல், எந்த ஒரு அர்ப்பணிப்பு அல்லது குறிப்பான கடமையும் எடுத்துக்கொள்ளாது, பொறுப்புகள் இல்லாமல் வாழ்பவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் சும்மாவே இருந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு திடீரென ஒரு விஷயத்தினால் அழுத்தம் வந்தாலோ, அல்லது ஒரு சாதாரண பிரச்சனை கூட அவர்களைத் தொட்டாலோ, அதை கையாள தெரியாமல், அவர்களின் திறனை மீறி, மிகவும் கடுமையாக நடந்துகொண்டு அவர்கள் தவறுகள் செய்கிறார்கள். மேலும், என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல், அந்த தவறுகள் அவர்களையும், அவர்களைச் சுற்றியவர்களையும் பாதிக்கும்.

இந்த இரண்டு வகைகளிலும் பொதுவான ஒரு விஷயம் ''பதற்றம் ''. இந்தப் பதற்றம் என்பது, அழுத்தங்களை மெதுவாக சேர்த்துக் கொண்டு அதை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தாமல் விட்டதினால் உருவாகும். அல்லது எந்தவொரு அனுபவமும் இல்லாமல் திடீரென ஒரு சூழ்நிலையை சந்திக்கின்ற போது உருவாகும். சில நேரங்களில் அது திடீரென வரும், சில நேரங்களில் மெதுவாக சேர்ந்து வந்து வெடிக்கும். எப்படியானாலும், அந்த பதட்டத்தினை சமாளிக்கத் தேவையான மன பக்குவம் இல்லாததால், மனிதன் நிதானத்தை இழந்து தவறான முடிவுகளை எடுக்கிறான்.

பதற்றம் ஒருவரை ஆட்கொள்ளுகின்ற பொழுது அவர் தான் செய்வதறியாது தன்னுடைய பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக கண்மூடித்தனமான விஷயங்களைத் தன் கையிலெடுப்பார். பெரும்பாலும் அவரது செயல்பாடுகள் சுற்றிலும் உள்ளவர்களை பாதிப்படையச் செய்வதாகவே இருக்கும்.

இது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையில் மட்டும் அல்ல, இந்த உலக அளவிலும் நடக்கிறது. தன்னளவில் மிகப் பெரிய படிப்பு படித்தவர்கள், அனுபவமுள்ளவர்கள் கூட, திடீரென ஒரு சூழ்நிலை வந்துவிட்டால் அதை சரியாக கையாள முடியாமல் போகிறார்கள். ஏனெனில் அவர்கள் அப்படி ஒரு வித்தியாச கோணத்தில் சூழ்நிலைகளை பற்றிய சிந்தனைகளை கொண்டிருந்ததில்லை.

ஒரு நாடு கூட தான் கூட்டு சேராது தனியாக இருந்தால், தன்னுடைய முடிவுகளை தவறாக கணித்து எடுக்கலாம். ஆனால் பல நாடுகள் ஒன்றாக இணைந்து இருந்தால், அவர்களின் முடிவுகள் அதிக நிதானத்துடன் இருக்கும். ஏனெனில், ஒருவரின் சிந்தனையை மற்றவர்கள் சமநிலைப் படுத்துகிறார்கள். மேலும் ஒருசில விட்டுக்கொடுத்தல்கள் இருந்தாலும் பலவகைகளில் இது ஒருவருக்கொருவர் சாதகமான பலன்களையேத் தருகிறது.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால், ஒரு மனிதன் தனியாக தன்னை தனிமைப் படுத்திக்கொண்டு, சமூகத்திலிருந்து விலகி வாழ்வது நல்லதல்ல. அது சரியானதாக தோன்றினாலும், அதன் விளைவுகள் அவனைப் பாதிக்கும்.

தனியாக இருக்கும் ஒருவரை பயமுறுத்தினால், அவர் எப்படி நடந்துகொள்வார் என்று யாராலும் கணிக்க முடியாது.

ஆனால் அத்தகைய மனிதன் ஒரு குழுவில் இருந்தால், மற்றவர்கள் அவரை அமைதிப்படுத்துவார்கள்.

''பார்ப்போம்'', ''சமாளிப்போம்'' என்று சொல்லி, அந்த சிக்கலான சூழ்நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள்.



குழுவாக இருப்பதால்:

கருத்துக்கள் பகிரப்படும்

முடிவுகள் சமநிலையாக இருக்கும் வாய்ப்பு அதிகம்

நிதானம் வரும்

அதனால், நாம் தனியாக இல்லாமல், ஒருவரை ஒருவர் அனுசரித்துக்கொண்டு கொஞ்சம் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். குழுவில் இருந்தாலும், நம்முடைய கருத்துக்களை மெதுவாக பகிர்ந்து, நல்ல முடிவுகளுக்கு மாற்ற முயற்சி செய்திட வேண்டும். இவை ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும், காலப்போக்கில் அது சரியாகும்.

இப்போது, எந்தப் பொறுப்பும் இல்லாமல் வாழ்பவர் களைப் பற்றி பார்க்கலாம்.

சிறிய குழந்தைகளோ, ஒய்வு பெற்றவர்களோ எந்தஒரு வேலையும் அல்லது எந்தப் பொறுப்புகளும் இல்லாது வெறுமையாக (சும்மாகவே) இருந்தால், அவர்களுக்கு எதிலும் ஒரு பிடிப்பு இல்லாதுபோகும் வாய்ப்பு அதிகம். வாழ்க்கையின் அந்தநேர மற்றும் அடுத்தடுத்த கஷ்டங்களை அறியாமல் போகிறார்கள். கஷ்டம் தெரியாமல் வளர்ந்தவர்கள் மற்றும் இருப்பவர்கள், பிறரின் கஷ்டத்தையும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அதனால், அவர்கள் பிறரை காயப்படுத்தும் வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

அதனால், குழந்தைகள் எல்லோருடனும் பழகி, சமூகம் எப்படி இருக்கிறது என்று கற்றுக் கொள்ள வேண்டும். தவறான எண்ணங்களுடன் வளர்க்கப்பட்டால், ஒரு கட்டத்தில் அந்த இடைவெளியை நிரப்ப முடியாமல் போகும்.

அதேபோல், ஒய்வு பெற்றவர்களும் சும்மா இருக்கக் கூடாது. உடலால் முடியும்வரை, ஏதாவது ஒரு வேலை, சேவை, அல்லது விருப்பமான செயல்களில் ஈடுபட வேண்டும். பணம் சம்பாதிப்பது மட்டும் வாழ்க்கையின் நோக்கம் அல்ல. சமூகத்திற்கு ஏதாவது செய்யலாம், புதிதாக ஏதாவது கற்றுக் கொள்ளலாம். நேரத்தினை வெல்வதும், காலத்தோடு ஒத்துபோவதும் அத்தியாவசி யமான விஷயமாகும். மனித வாழ்க்கை என்பது ஒரே ஒருமுறை தான், வாழ்வதற்கு கடமை பற்றிய தெளிவும், அர்ப்பணிப்பும் மிகவும் அவசியமாகும்.

சின்ன வயதிலிருந்தே குழந்தைகள் பள்ளி படிப்பு மட்டும் அல்லாது பொதுவெளி சார்ந்த ஏதாவது ஒரு விஷயத்தில் ஈடுபட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இயன்றவரையில் உறவினர்கள் மற்றும்



நண்பர்களின் குடும்ப நிகழ்வுகளுக்கு அழைத்து செல்ல வேண்டும். விழா பற்றிய இன்னபிற தகவல்களை பகிர்ந்துகொள்ளவேண்டும்.

சரி-தவறுகளை சுட்டிக்காட்டிட வேண்டும். அப்போது தான் எந்த சூழ்நிலையும் வந்தாலும், "சமாளிக்கலாம்" என்ற எண்ணம் வரும். சமாளிக்க முடிகிறதா இல்லையா என்பது அடுத்த விஷயம். ஆனால் முதலில் அந்த மனநிலை வர வேண்டும். அந்த மனநிலை, பொறுப்பு களை எடுத்துக் கொள்பவர்களுக்குத்தான் வரும். எந்த பொறுப்பும் இல்லாமல் தப்பித்து வாழ்பவர்களுக்கு அந்த எண்ணமே வராது.

முதியோர்களுக்கும் அவர்களது உடல்நிலை மற்றும் இயலாமைகளை கணக்கில்கொண்டு இன்னபிற விஷயங் களை பகிர்தலையும், சின்னசின்ன வேலைகளையும், பொறுப்புகளையும் கொடுப்பது அவர்களது தன்னம்பிக் கையினை விடாது இருக்கச்செய்யும்.

அதனால் முடிந்தவரையில் ஒருவர்,

ஒருவர் கடமையில்லாது வெறுமையாக இருக்கக்கூடாது அல்லது சும்மா இருக்கக் கூடாது

தனியாக இருக்கக் கூடாது அல்லது இயன்றவரையில் தனியாக இருப்பதை தவிர்க்கவேண்டும்

பதட்டம் இல்லாமல் அல்லது பதட்டத்தால் அதிகம் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்றால், மனிதன் ஒரு சமூகத்தின் பகுதியாக வாழ வேண்டும். இன்றைய காலத்தில் நாம் எல்லோரும் அருகருகே இருப்பது போல தோன்றினாலும், உண்மையில் மனதளவில் தூரமாகி விட்டோம்.

அந்த செயற்கைத்தனமான (artificial) வாழ்க்கைதான் நம்மை இந்த பதட்டமான நிலைகளுக்கு தள்ளுகிறது. ஒரு மனிதனுக்கு, அவன் சாய்ந்து ஆறுதல் அடைய ஒரு தோள் இல்லையெனில், அவன் உண்மையில் வாழவில்லை என்று சொல்லலாம். இது தனிப்பட்ட மனித வாழ்க்கையிலிருந்து ஆரம்பித்து, உலக அரசியல் வரை பொருந்தும் ஒரு மறுக்கமுடியாத உண்மை. "கூடி வாழ்ந்தால் நன்மை, தனியாக இருந்தால் நிலைத்தன்மை குலையும்."

உலக அரசியல் எடுத்துக்காட்டாக பேசும்போது,

அமெரிக்கா– ஈரான் மோதலை நேரடியாக " போர்" அல்லது "state war" என்று சொல்ல முடியாது. கடந்த சில ஆண்டுகளில் அது நேரடி முழுமையான போராக நடந்ததில்லை.

ஆனால், ஒரு முக்கியமான மனநிலையினை இதில் பார்க்க முடியும். ஒரு நாடு, " நாம் எடுத்த நடவடிக் கைக்கு எதிராளி பெரிய அளவில் பதிலடி கொடுக்க மாட்டான்" என்று நினைத்து முடிவு எடுக்கலாம்.

ஆனால் நடைமுறையில்,

அந்த பதில் நேரடியாக இல்லாமல், கூட்டணி நாடுகள், பொருளாதாரம் அல்லது மறைமுக தாக்குதல்கள் மூலம் வரலாம்.

இதிலிருந்து புரியும் விஷயம் என்னவென்றால், பொது விஷயங்களில் ஒரு தலைவனாக தனியாக எடுக்கப் படும் முடிவுகள் பெரும்பாலும் தவறான கணிப்பு களுக்கே வழிவகுக்கும். இதற்கு முந்தைய வரலாறுகளும் இதனையே பறைசாற்றுகின்றன.

தான்தோன்றித்தனமான மற்றும் நமது ஆணவத்தினால் எடுக்கப்படும் முடிவுகள் சரியான முடிவுகளாக இருந்த தில்லை அல்லது நன்மை பயக்குவதில்லை.

அதே நேரத்தில், நாடுகள் கூட்டாக (alliances) செயல் பட்டால், பலரின் கருத்துகள் சேர்ந்து முடிவு எடுப்பதால், அது அதிக நிதானமாகவும் சமநிலையாகவும் இருக்கும்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் சீரான இயக்கத்தை (consistent flow) வைத்திருக்க வேண்டும். அது உடலிலும் மனதிலும் இருக்க வேண்டும். ஒரு விஷயம் திடீரென்று வந்து நம்மை குலைக்காமல் இருக்க, நாம் ஏற்கனவே ஒரு நிலையான வாழ்க்கை முறையை உருவாக்கி வைத்திருக்க வேண்டும்.

உடல்நிலையை எடுத்துக்கொண்டால் நாம் எப்போதும் உடற்பயிற்சி செய்து, உடலை ஒரு நார்மல் நிலையில் வைத்துக் கொண்டால், திடீரென்று பெரிய உடல்நலப் பிரச்சினைகள் வரும் வாய்ப்புகள் குறையும். வந்தாலும் கூட, அதை தாங்கிக் கொள்ளும் சக்தி உடலில் இருக்கும். உடல் ஒரு ஒழுங்கில் இருக்கும்.

அதே மாதிரி, மனநிலையும் ஒரு ஒழுங்கில் இருக்க வேண்டும். எந்த சூழ்நிலை வந்தாலும் அதை நாம் எதிர்கொள்ள வேண்டும் என்ற மனப்பக்குவம் இருக்க வேண்டும்.

அது எப்படி வரும் என்றால், ஒரு ஒரு விஷயத்தையும் பொறுப்புணர்சியுடன் எடுத்துக் கொண்டு, நாம் அதை தொடர்ந்து செய்து கொண்டு, சின்ன சின்ன பிரச்சினை களையே நேருக்கு நேர் எதிர்கொண்டு சமாளித்து கொண்டே போனால், மெதுவாக அந்த பக்குவம்



உருவாகும். ஆனால், எந்தவொரு பொறுப்பும் எடுத்துக் கொள்ளாமல், எதையும் நேராக சந்திக்காமல் தவிர்த்து வாழ்பவர்கள், ஒரு சின்ன பிரச்சினை வந்தாலும் கூட அதை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறுவார்கள்.

இதனால், நமது வாழ்க்கையை இரண்டு முக்கியமான நிலைகளில் *(phases)* நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்:

**முதல் நிலை: தனிப்பட்ட வளர்ச்சி**

உடல்நிலையை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மனநிலையை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தொடர் முயற்சி செய்கிற பழக்கம் இருக்க வேண்டும்.

பிரச்சினைகளை தள்ளி வைக்காமல், அதை எதிர்கொள்ள வேண்டும்.

**இரண்டாவது நிலை: சமூக இணைப்பு**

ஒரு மனிதன் எந்த காலத்திலும் தனியாக பிரிந்து வாழக் கூடாது.

அவன் ஒரு குழுவோடு, ஒரு சமூகத்தோடு இணைந்து இருக்க வேண்டும்.

எல்லோரும் நமக்கு பிடிக்க வேண்டிய அவசியமில்லை

ஆனால் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, அனுசரித்து பழக வேண்டும்

ஒரு பொதுவான நெறி *(common understanding)* இருக்க வேண்டும்

ஒருவருடன் ஒருவர் இணைந்து இருக்க வேண்டும்

அப்படி ஒரு நல்ல இணைப்பு இருந்தால், வாழ்க்கையில் வரும் சிக்கல்களை சமாளிப்பது எளிதாகும். இந்த இரண்டு விஷயங்களும், தனிப்பட்ட பக்குவம் மற்றும் சமூக இணைப்பு இருந்தால் தான், பதற்றமான *(panic)* சூழ்நிலைகளையும் நாம் சரியாக கையாள முடியும். இல்லையெனில், எதிர்பாராத ஒரு சூழ்நிலை வந்தால் அதை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல், மனதில் எதிர்மறை எண்ணங்கள் அதிகரித்து, அந்த நிலையை கையாள முடியாமல் போகும். ஒரு மனிதனுக்கு "எதை வந்தாலும் நான் எதிர்கொள்கிறேன்" என்ற சிந்தனை உருவாகும் வரை, அவனுக்கு அந்த பதற்றமான நிலைகளை சமாளிப்பது கடினமே.

பதட்டத்தினை பக்குவமாக கையாளுவதற்கு தொலை நோக்கிய பார்வை மிகவும் முக்கியமாகும்.

இது பெரும்பாலும் எதிர்மறை எண்ணங்களை அடிப்படையாக கொண்டமைவதாகும். எதிர்பார்த்திராத நிகழ்வுகளை கணக்கில்கொண்டு உருவாக்கப்பட்ட வையாக இருக்கும்.

இதனாலேயே காப்பீடுகள் ( இன்ஸ்சுரன்ஸ்) மற்றும் வருங்காலத்திற்கான வைப்புத்தொகை, சேமிப்பு இப்படித் தொடரும் இன்னபிற பாதுகாப்பு அம்சங்களை கருத்தில் கொண்டு வடிவமைக்கபட்ட விஷயங்கள் நமது வாழ்க்கையின் பிரித்துபார்க்கமுடியாத அங்கமாகிவிட்டன. இந்த விஷயங்கள் முழுமையாக இழப்புகளை ஈடுசெய்ய முடியாதென்றாலும் ஒரு உடனடித் தேவைகளை பூர்த்தி செய்யும் அரணாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# மலைக்க வைக்கும் மலாவியின் மலாவி ஏரி:

குரு.கல்யாணசுந்தரம்

பகுதி 2



கடல் போன்ற மலாவி ஏரியை ஒரு பதிவில் விவரிப்பது நியாயமாகாது, காரணம், மலாவி ஏரியைப்பற்றி அநேக நல்ல மற்றும் மிக அழகான விடயங்கள் பல உள்ளன. ஆதலின் குறிப்பிட்டசில பகுதிகளாக எடுத்துரைக்க விரும்புகிறேன். மலாவி மூன்று பிராந்தியங்களாக, தெற்கு, மத்திய மற்றும் வடக்கு - என பிரிக்கப்பட்டிருப்பதால், அதனையொட்டியே, சில பகுதிகளாக காண்போம். ஒவ்வொரு பிராந்தியத்தில் மலாவி ஏரியின் சிறப்பான

அமைப்புகள் என்று அதைக் காணுவது சிறப்பு. தெற்கில் மலாவி ஏரிக்கு மூன்று முக்கியமான இடங்கள் உண்டு. அதனை ஒன்றன் பின் ஒன்றாக விவரிக்கிறேன்.
தெற்கு மலாவியில் மலாவி ஏரி:

***மங்கோச்சி (Mangochi):***

இந்த இடத்தை/ நகரை மலாவியின் தெற்கு முனை என்று கூறலாம். இவ்விடத்திற்கு பிறகு, அகண்ட ஏரி, புனலைப்போல் படிப்படியாக சுருங்கி சிறீ என்ற (*Shire*) நதியாக ஓடத்தொடங்குகிறது. இந்த அருமையான புனல் போன்ற புவிநில அமைப்பினை, நதிக்கு அப்பாலிருக்கும், சிறு மலைத்தொடர் மேல் சென்று காண முடியும். ஏறத்தாழ *10* வருடங்களுக்கு முன், அந்த மலைத்தொடர் வரை பயணித்து அந்த அற்புதமான காட்சியைக்கண்டிருக்கிறேன்.

மங்கோச்சியிலிருந்து வடக்கு நோக்கி மலாவி ஏரிக் கரையோரம் பயணிக்க அநேக உல்லாசப்போக்கிடங் கள் இங்கு உண்டு. சிறப்பான சில இடங்களைப்பற்றி பார்ப்போம்.

*Sun and sand:*

மிகப்பெரிய, அழகான ஏரிக்கரை, தங்குமிடம், உணவு விடுதி இத்யாதி நல்ல வசதிகள் கொண்டது.

*Club Makakola Retreat*

இதுவும் ஏரிக்கரையோரம் அமைந்த ஒரு நட்சத்திர விடுதி போன்ற, மிக அழகான இடமாகும். இந்த விடுதி சிறு விமானங்கள் வந்திறங்கி பயணிக்க வசதியாக ஓடுதளவசதியும் கொண்டது.

இது போன்ற உல்லாச விடுதிகள், அழகான ஏரிக்கரைகள் கொண்டது மங்கோச்சி.
மங்க்கி பே (*Monkey Bay*):

இந்த இடத்தை மலாவி ஏரியின் மற்றுமொரு தெற்கு முனை என வைத்துக்கொள்ளலாம். மலாவி ஏரியில் பெரிய படகுகள் வந்து செல்லும் வகையில் பல படகுத்துறைகள் உண்டு. அவற்றுள் முதன்மையானது, முக்கியமானது இதுவாகும். இதனருகிலிருக்கும் சிறு







மலை மீதேறி மூன்றுபுறமும் மலாவியினது ஏரி நீர் சூழ்ந்திருப்பதை காணும்பொழுது ஏரி அல்ல கடல் என உணரத்தூண்டும். இந்த ஊரின் படகுத்துறையோடு சில நூறு மைல்கள் நீண்டிருக்கும் சாலை முடிகிறது *(dead end to the road ....).*

இங்குள்ள படகுத்துறையிலிருந்து இல்லாலா *(Illala)* என்ற பெரிய படகு *(ferry boat)* மலாவி ஏரியின் வடபகுதியான கரோங்கா *(Karonga)* வரை சென்று வர ஏறத்தாழ ஒரு வாரமாகும். இந்த முனையிலிருந்து மலாவி ஏரியின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லலாம். நான் முதன்முதலில் *Limbe* - லிருந்து ஏறத்தாழ *250 km* பயணித்து வந்தபோது, இதற்கு மேல் சாலை இல்லை *Monkey Bay Boat jetty gate is the dead end* என்று கூறி பார்த்தபொழுது வியப்பாயிருந்தது.

## கேப் மக்லியர் *(Cape Maclear):*

மலாவி ஏரியின் மிக அழகான இடங்களில் ஒன்று. மேலும் கடற்கரையே இல்லாத நாட்டிற்குள் அமைந்த, ஒரு சிறிய அழகான தீபகற்பம், ஆம் மூன்றுபுறம் மலாவி ஏரியால் சூழப்பட்ட சிறு மலைகள், மேட்டு நிலங்கள், தெளிவான நீருடன் காணும் ஏரிக்கரைகளும் மற்றும் அதனையொட்டிய அழகிய கிராமம் என ரம்யமான இடம். நீருக்கு ஏரி, அதனையொட்டி ஏரிக்கரை, சிறு தீவுகள் மற்றும் மலைகளும் இருப்பதால், இங்கு உல்லாசமாய் நேரம் கழிக்க வருபவர்களுக்கு, நீச்சல், படகு சவாரி,

## கேப் மக்லியர் (Cape Maclear):





மலையேற்றம் இத்யாதி என பயனுள்ளதாய் பல பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த இடம். அழகான விடுதிகள், *scuba diving facilities* என இதன் சிறப்பம்சங்களை சொல்லிக்கொண்டே போகலாம். இது போன்ற இடங்களை காணும்பொழுது சொர்க்கம் மண்ணுலகிலும் உண்டு என சொல்லத்தூண்டும்.

இன்னும் பல காணத்தக்க ஏரிக்கரை, அருமையான உல்லாச விடுதிகள் தெற்கு பிராந்தியத்தில் உண்டு.

ஆதலால் மலாவி வாழ் மக்கள் வருடத்தில் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் சென்று மலாவி ஏரிக்கரை சென்று மகிழ்வுடன் நேரம் கழித்து திரும்புவர். குடும்பம்/நண்பர்களுடன் நான் பலமுறை சென்றிருக்கிறேன். ஆசிரியனாக பலமுறை மாணாக்கர்களுக்கு *Cape Maclear* - க்கு கல்வி சுற்றுலா ஏற்பாடு செய்து அவர்களுடன் போய் வந்திருக்கிறேன். வாழ்வே பயணம், அதனில் நல்ல இடங்களை சென்று பார்த்து ரசித்து வாழ்வோம்.



# சுகம் தரும் சுவடுகள்...

## சித்து கவிதை

தெருமுக்குக் கடை பாயின்
கொள்முதல் ஊக்கத்தேன் மிட்டாய்,
அஞ்சு லாந்தர் தள்ளுவண்டி,
பஜ்ஜி, பட்சணம் காரச் சட்னியுடன்.
பள்ளிவாசலில் கூவும்
சிவப்பு முந்திரிப்பழக் கூறுகள்,
மிளகாய்த்தூள் தடவிய
மாங்காய்க் கீற்று.
சித்தி தரும் சிங்கப்பூர் மிட்டாய்...
பெரியம்மா வீட்டு அன்பில்
பொரித்த பலகாரங்கள்,
அத்தை வீட்டு பெருமிதம்,
முகம் மறந்துபோன
நண்பனின் பகட்டுப் பேச்சு.
தாய்மடி உறக்கம்,
வெள்ளிக்கிழமை சிவன் கோவில் பஜனை,
தெரிவிக்காத காதல்,
தெரிந்தே செய்த குறும்புகள்,
அறியாமல் செய்த பிழைகள்.
மறந்துபோன உறவின்
ஏளனப் பேச்சுகள்,
நடக்கும் தூரம் குறைக்க
கடந்துசென்ற மூத்திரச்சந்து,
நாய்கள் பயத்துடன் நடந்த தெருக்கள்.
முழுக்கால்சட்டை வயதில்
அரைக்கால்சட்டை தரிசனம் கண்ட வீடு,
கிணற்றடி குளியல்,
பிளஷ் இல்லா கழிவறை,
தெருவோர வேடிக்கையிடையில்
மொட்டமாடி கல்வி..
பக்கத்து வீட்டு தூர்தர்ஷனில்
சித்ரமாலா, சித்ரஹார்,
பகட்டுக்காகப் படித்த
மு. மேத்தா, அப்துல் ரகுமான்,
சிந்தை கழுவிய பாலகுமாரன்.
நினைவுகளாய் மாறிப்போன
அந்தச் சிறு உலகம்,
இன்னும் கொஞ்சநாள் நிஜமாகவே
நீடித்திருக்கலாமோ என்று எண்ணுவது,
முதுமையின் ஏக்கம் அல்ல;
வாழ்ந்த வாழ்க்கைக்குச் செலுத்தும்
மனதின் நன்றிக்கடன்.
வாழ்க வளமுடன்.




## தத்துவ அரசியலின் வீழ்ச்சியும்
## தனிமனித துதிபாடும் அரசியலின் வளர்ச்சியும்!

அரசியல் என்பது மனித சமூகத்தின் வாழ்வியலையும், எதிர்காலத்தையும் நிர்ணயிக்கக் கூடிய ஒரு உன்னதக் கருவியாகும். அது சமத்துவம், நீதி, மக்களாட்சி, மக்கள் பொருளாதாரம் மற்றும் அந்த மக்களின் அடிப்படை உரிமைகளை மையமாகக் கொண்ட தத்துவ அரசியலாக இருக்க வேண்டும். ஆனால், கடந்த நூறாண்டு கால உலக மற்றும் இந்திய அரசியல் வரலாற்றை உற்று நோக்கும்போது, கொள்கைகளும் கோட்பாடுகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஒருசில தனிமனிதர்களின் பிம்பங்களை மட்டுமே ஒரு மையமாகக் கொண்டதான 'தனிமனித வழிபாடு' *(Cult of Personality)* மற்றும் தத்துவமற்ற அரசியல் கோலோச்சுவதை நாம் காண முடிகிறது. இந்த ஆபத்தான மாற்றம் உலகெங்கிலும் உள்ள எல்லா மக்களுக்கும் எத்தகைய பேரழிவுகளைத் தந்துள்ளது என்பதை கடந்த நூறாண்டுகால நிகழ்வுகள் வாயிலாகப் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த நூற்றாண்டினுடைய தொடக்கத்தில் அமெரிக்க அரசியல் உட்ரோ வில்சன், பிராங்க்ளின் டி. ரூசுவெல்ட் போன்றோரின் 'நியூ டீல்' *(New Deal)* மற்றும் சுதந்திரம், சமத்துவம் என்கின்ற ஒரு தத்துவார்த்த கட்டமைப்பால் இயங்கியது. ஆனால் அடுத்த பிற்காலங்களில், குறிப்பாக ஊடகங்களின் ஆதிக்கம் அதிகரித்த பிறகு, அந்த தத்துவ விவாதங்கள் மறைந்து ஒரு தனிமனிதப் பிம்பங்களும், பிரசாரயுக்திகளும் தேர்தலைத் தீர்மானிக்கத் தொடங்கின.

கொள்கைகளை விவாதிப்பதை விட, தலைவர்களின் கவர்ச்சி *(charisma)*, விளம்பர பலம் மற்றும் சமூக வலைதள பிம்பங்கள் மட்டுமே முதன்மையாகின. இதன் விளைவாக, அமெரிக்க சனநாயகம் இன்று இரண்டு துருவங்களாகப் பிளவுபட்டு, மக்களின் உண்மையான பொருளாதாரப் பிரச்சினைகள் இங்கு தீர்க்கப்படாமல், தனிமனிதர்களின் அதிகாரப் போட்டிக்கான களமாகச் சுருங்கிவிட்டது.

லெனின் முதல் விளாடிமிர் புட்டின் வரைஉருசியாவின் 20-ஆம் நூற்றாண்டு வரலாறு தத்துவ அரசியலின் உச்சத்தையும், அதனுடைய கொடூரமான வீழ்ச்சியையும் உலகிற்குச் சொன்னது.

கார்ல் மார்க்சின் பொதுவுடைமை சமத்துவ தத்துவத்தின் அடிப்படையில் லெனினால் உருவாக்கப்பட்ட சோவியத் ஒன்றியம், பிற்காலத்தில் சர்வாதிகாரத் தனிமனித வழிபாடாக மாறியது. கட்சி மற்றும் கோட்பாட்டை விட றாலின் என்பதே இறுதியானது என்ற நிலை இலட்சக்கணக்கான மக்களின் உயிரைப் பலி வாங்கியது.

இன்றைய நவீன உருசியாவில், விளாடிமிர் புட்டின் தன்னைத் தாண்டி வேறு எந்த மாற்றுக் கொள்கைக்கும் இடமளிக்காமல், ஒற்றை நபர் அதிகார மையமாக அவர் உருவெடுத்துள்ளார். தத்துவமற்ற இத்தகைய தனிமனித அதிகாரம், நாட்டை நீண்ட காலப் போர்களுக்கும் பன்னாட்டு தனிமைப்படுத்தலுக்கும் தள்ளியுள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் சிதைவுக்குப் பிறகு உக்ரைன் விடுதலையானபோது, நிலையான அரசியல் தத்துவத்தையோஅல்லது வலுவானசனநாயக நிறுவனங்களையோ உருவாக்கத் தவறியது.

தத்துவார்த்த அரசியல் இல்லாததால், ஊழலும் அதிகாரப் போட்டியும் உக்ரைனை உலுக்கின. இறுதியில், நாட்டை வலுப்படுத்துகிறோம் என்ற பெயரில் உருவான தீவிர தேசியவாதமும் தனிமனிதப் பிம்ப அரசியலும், இன்று அந்நாட்டின் புவிசார் சூழலைச் சிதைத்து, இலட்சக்கணக்கான மக்களை அகதிகளாக்கிய போர்ச் சூழலுக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய அரசியல் என்பது அகிம்சை, சமூக நீதி, மதச்சார்பின்மை மற்றும் சமத்துவம் என்ற பலத்த தத்துவார்த்தங்களை கொண்டிருந்தது. அண்ணல் காந்தி, அம்பேத்கர், நேரு போன்றோரின் சிந்தனைகள் நாட்டை ஒரு நெறிப்படுத்தப்பட்ட பாதையில் கொண்டு சென்றன.
ஆனால், காலம் செல்லச் செல்ல, காங்கிரசு கட்சியிலும் சரி, பிற கட்சிகளிலும் சரி, கட்சிக் கோட்பாடுகள் மறைந்து தனிமனித குடும்ப வாரிசு அரசியலும், ஒற்றை நபர் பிம்ப அரசியலும் வேரூன்றின.

இன்று இந்திய அரசியலில் தத்துவார்த்த விவாதங்கள் முற்றிலும் மறைந்து, தனிமனிதர்களின் புகழ்பாடும் பரப்புரைகளும், உணர்ச்சிகளைத் தூண்டும் மத அடையாள அரசியலும் மக்களைத் திசைதிருப்பப் பயன்படுகின்றன.

இலங்கையின் நூறாண்டு அரசியல் வரலாறு என்பது தனிமனித மற்றும் குடும்ப அரசியலின் நேரடித் தீய விளைவுகளைச் சந்தித்த துயர வரலாறாகும். எசு. டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தொடங்கி இராசபக்சே சகோதரர்கள் வரை அனைவரும் தனிமனிதப்பிம்பம் மற்றும் பேரினவாதக் கொள்கைகளைத் தங்களின் அதிகாரப் பலத்துக்காகப் பயன்படுத்தினரே தவிர, பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்கள் இணைந்து வாழக்கூடிய ஒரு சமத்துவத் தத்துவத்தை உருவாக்கவில்லை.

இராசபக்சேக்களின் தனிமனித சர்வாதிகாரப் போக்கு, தமிழின படுகொலைக்கும், நாட்டின் வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சிக்கும் (2022 திவால் நிலை) வழிவகுத்தது. தத்துவமற்ற தனிமனித அரசியல் ஒரு நாட்டையே எப்படி நாசமாக்கும் என்பதற்கு இலங்கை மிகச்சிறந்த உதாரணம்.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு ஏனைய மாநிலங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. பெரியார், அண்ணா, போன்றோரின் சமூக நீதி, சுயமரியாதை, பகுத்தறிவு மற்றும் தமிழ் மொழிப் பற்று ஆகிய தத்துவார்த்த அரசியலே தமிழகத்தின் அடித்தளத்தை மாற்றிய மைத்தது.



எனினும், பிற்காலக் கட்டங்களில் தத்துவத்தின் ஆழம் குறைந்து, தனிமனித வழிபாடும், குறிப்பாகத் திரைப்படத் துறையின் பிம்பங்களை மையமாகக் கொண்ட அரசியலும் வேரூன்றத் தொடங்கின. கொள்கைகளை விவாதித்த மேடைகள் மறைந்து, ரசிகர் மன்றங்களும், தனிமனிதத் துதிபாடும் அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளாக மாறின. கொள்கை வீழ்ச்சியடைந்து, தனிமனித பிம்பம் மட்டுமே இலட்சியமாகும்போது, அது பொதுமக்களின் உரிமைகளைக் கேள்வி கேட்கும் திறனைப் பறித்துவிடுகிறது.

மேற்கண்ட உலக மற்றும் உள்நாட்டு வரலாற்று நிகழ்வுகள் நமக்கு உணர்த்தும் பாடம் தெளிவானது, அரசியலில் தத்துவம் வற்றும் போது, அங்கே தனிமனித துதிபாடுதலைத் தாண்டி வேறொன்றும் மிஞ்சுவதில்லை.

தத்துவ அரசியல் என்பது மக்களுக்கு உரிமைகளையும், சட்டத்தின் ஆட்சியையும், சமத்துவத்தையும் வழங்கும். ஆனால் தனிமனித அரசியல் மக்களை அடிமைகளாகவும், வாக்களிக்கும் எந்திரங்களாக மட்டுமே பார்க்கும். இந்த ஆபத்தான போக்கை மக்கள் உணர்ந்து, பிம்ப அரசியலை நிராகரித்துவிட்டு, மீண்டும் கொள்கை மற்றும் தத்துவ அடிப்படையிலான சனநாயகத்தை மீட்டெடுக்க வேண்டியதே காலத்தின் கட்டாயமாகும்.



கட்டுரை: இராசகுரு



"நல்ல சிந்தனையும், நல்ல உள்ளமும் எப்போதும் ஒரு வலிமையான கலவையாகும். அதனுடன் ஒரு கற்றறிந்த நாக்கையோ அல்லது பேனாவையோ சேர்க்கும்போது, நீங்கள் மிகவும் சிறப்பான ஒன்றைப் பெறுகிறீர்கள்."

"பின்னணியில் இருந்து வழிநடத்துங்கள் — மற்றவர்கள் தாங்களே முன்னணியில் இருப்பதாக நம்பட்டும்."

- நெல்சன் மண்டேலா

# மலாவி - லிலாங்வேவில் 80-வது இந்திய சுதந்திர தின விழா

*காலை (15/8/36)*

இந்திய தூதரகத்தில், இந்திய தேசிய கொடியேற்றம், மாண்புமிகு இந்திய தூதர் திரு அமராராம் குஜார் அவர்களின் வாழ்த்துரை, கலை நிகழ்ச்சி, போட்டிகளில் வென்றோருக்கு பரிசுகள், சிற்றுண்டி என சிறப்பாக நடைபெற்றது. இந்திய தூதரகம் வினாவிடை போட்டி, புகைப்படப்போட்டி, சிறு காணொளிப்போட்டி என சமூகத்தாரை ஊக்குவித்து விழாவை சிறப்பாக நடத்தினர். தமிழக அயலக நலத்துறை மூலமாக மலாவிக்கு அனுப்பி வைக்கப்பட்ட பரதக்கலை நடன ஆசிரியர் செல்வி பூஜா சிவக்குமார் அவர்களது நடனம் அழகு தமிழில் அழகு முருகனைப்போற்றும் பாட்டிற்கு அமைந்தது நமக்கு பெருமை. விழாவை சிறப்பாக நடத்திய இந்திய தூதர், தூதரக அதிகாரிகள் எங்களது பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்கள்.

*மாலை (15/8/26)*

இந்திய ஊரக குழுமம் - லிலாங்வேவில் இந்திய சமூகத்தாரால் கொண்டாடப்பட்டது. கிரிக்கெட், வாலிபால், இத்யாதி பல போட்டிகள் நடத்தப்பட்டு சமூகத்தாரிடையே குழு ஒத்துழைப்பு, நட்பு வளர்த்தனர்.

விழாவன்று கலை நிகழ்ச்சிகள், இந்திய தூதரின் சிறப்புரை, பரிசு வழங்கல், கலை நிகழ்ச்சிகள், இரவு விருந்து என சிறப்பாக நடந்தேறியது. சமூகத்திற்காக, சமூகத்தாரால் நடத்தப்பட்ட சமூக நிகழ்வு, நாட்டு சுதந்திரத்தையும், சுதந்திரத்திற்கு பாடுபட்ட அனைவரையும் போற்றி சிறப்பாக நடந்தேறியது.

மாலை எடுத்த படங்கள் கீழே...
காலை எடுத்த படங்கள் அடுத்த பக்கத்தில்
















மலாவி: சுதந்திர தினவிழாவில் காலையில் எடுத்த படங்கள்



# சீவகசிந்தாமணி - மறுசொல்லல்!

## குணமாலையார் இலம்பகம் -

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி, தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் தனித்துவம் பெற்றது. இதுவரை நாம் பார்த்த நாமகள், கோவிந்தையார், காந்தருவதத்தையார் இலம்பகங்களைத் தொடர்ந்து இன்று பார்க்கயிருப்பது, குணமாலையார் இலம்பகம்.

## குணமாலையின் தோற்றமும்

இலம்பகத்தின் தொடக்கத்தில், இராசகிரகம் அல்லது எயிற்பட்டினம் போன்ற சீவகனின் சஞ்சாரப் பகுதிகளை ஒத்த அழகிய நகர்ச்சூழல் விவரிக்கப்படுகிறது. அந்நகரில் வணிகக் குலத்தில் பிறந்தவள் குணமாலை. இவள் பேரழகும், சிறந்த பண்பும் கொண்டவளாகத் திகழ்ந்தாள். ஒருநாள், தன் தோழிகளுடன் சேர்ந்து நகர வீதிகளில் உலாவி வருகிறாள். அவளது அழகு, அந்த நகரத்து வீதிகளுக்கே மேலும் மெருகூட்டுவது போல இருந்தது. அவளது தோற்றமும் நடையும் காண்போரை ஈர்க்கும் வண்ணம் அமைந்திருந்தது.

அதேவேளையில், மதம் பிடித்த ஒரு வெறி பிடித்த யானை, பாகனின் கட்டுப்பாட்டை மீறி நகருக்குள் ஓடி வருகிறது. அந்த யானையின் சீற்றத்தால் வீதிகளில் இருந்த மக்களும் வணிகர்களும் அலறி அடித்து ஓடுகின்றனர். யானையின் கோரத் தாண்டவத்தால் பெருங் குழப்பம் ஏற்படுகிறது. இந்த ஆபத்தான சூழ்நிலையில், குணமாலையும் அவளது தோழிகளும் செய்வதறியாது திகைத்து அச்சத்தில் நடுங்குகிறார்கள். யானை அவர்களை நோக்கித் துரத்தி வருகிறது, அவர்களின் உயிர் காக்கப்படுவது என்பது கேள்விக்குறியாகிறது.

அந்த இடத்திற்கு எதிர்பாராதவிதமாக வந்தடைகிறான் காப்பியத் தலைவன் சீவகன். அவனது கம்பீரமான தோற்றமும், வியத்தகு வில்வித்தையும், வீரமும் அங்குள்ள அனைவரையும் வியக்க வைக்கின்றன. மதம் பிடித்த யானையின் பேராபத்திலிருந்து குணமாலையையும் அவளது தோழிகளையும் காப்பாற்ற சீவகன் உடனடியாகத் துணிந்து களத்தில் இறங்குகிறான். தனது அசாத்தியமான துணிச்சலாலும், போர்க்கலைத் திறமையாலும் அந்த வெறிபிடித்த யானையை அடக்கி, அதன் சீற்றத்தைத் தணித்து, அதன் பிடியில் இருந்து குணமாலையை வெற்றிகரமாக மீட்டுக் காப்பாற்றுகிறான்.

சீறிவந்த யானையிடமிருந்து தன் உயிரைக் காப்பாற்றிய சீவகனின் அற்புத வீரத்தைக் கண்ட குணமாலை, அவனது தோற்றத்திலும் கம்பீரத்திலும் மனதைப் பறிகொடுக்கிறாள். அந்த விநாடியே சீவகனின் மேல் அவளுக்குத் தீவிரமான காதல் பிறக்கிறது. காப்பாற்றப்பட்ட மகிழ்ச்சியை விட, தன் உயிரைக் காத்துத் தெய்வமாய் நின்ற சீவகனின் உருவம் அவள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிடுகிறது. சீவகனும் குணமாலையின் அழகில் மயங்கி, அவளது பண்புகளைப் போற்றுகிறான். இவர்களின் இந்தச் சந்திப்பு இருவர் மனதிலும் காதலின் விதையை ஆழமாக விதைக்கிறது.

யானையின் பிடியில் இருந்து வீடு திரும்பிய குணமாலை, சீவகனைப் பிரிந்த துயரத்தாலும் அவனது நினைவில் மனதை இழந்ததாலும் பெரிதும் வாடுகிறாள். உணவும் உறக்கமும் இன்றி சீவகனின் ஞாபகத்திலேயே காலம் கழிக்கிறாள். அவளது தோழிகள் குணமாலையின் மனநிலையைப் புரிந்து கொண்டு, சீவகனிடம் அவளது காதலைச் சேர்த்து வைக்கத் தூது செல்கின்றனர். சீவகனும் குணமாலையின் தூதுவர்களை அன்போடு வரவேற்று, அவளது காதலை ஏற்பதாக வாக்களிக்கிறான்.




குணமாலையார் இலம்பகத்தில், சீவகனின் வீரம் மற்றும் கருணைத் திறன் மிக அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆபத்தான ஒரு சூழ்நிலையில் தொடங்கும் இக்கதை, காதலின் ஆழத்தையும், வீரனின் பெருமையையும் இணைத்துச் செல்லும் பாங்கு வியப்புக்குரியது. யானையிடமிருந்து காப்பாற்றப்பட்டு, சீவகனின் மனைவியாகும் பேற்றினைப் பெறும் குணமாலையின் கதையானது, காப்பியத்தின் சுவையை மேலும் கூட்டுகிறது. இந்நிகழ்வுகள் சீவகனின் நற்பண்புகளையும், அவனது காப்பிய நாயகத் தன்மையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

— தொடரும்

## நூல் அறிமுகம்:
## மதுரை மு.அன்புச்செல்வன்

# இடதுசாரிகளின் கருத்தியல் வளர்ச்சியையும் கவனத்தில் எடுத்திருக்கலாம்!

மக்கள் ரசித்த திரைப்படங்களும்
மார்க்சிய விமர்சனமும் -
பதிப்பும் மறுவாசிப்பும்
மணிகோ. பன்னீர்செல்வம் -
அய்யுறு வெளியீடு,
*9344501919*
மின்னஞ்சல்: *aiyuru.24@gmail.com*

அய்யுறு வெளியீட்டின் முதல் நூலாக வெளிவந்துள்ளது 'மக்கள் ரசித்த திரைப்படங்களும் மார்க்சிய விமர்சனமும்' என்ற நூல்.

இந்நூலில் வெகுமக்கள் ரசித்துப் பார்த்த, வணிக ரீதியாக வெற்றிபெறச் செய்த, புத்தாக்கங்கள் என்று புகழப்பட்ட 16 திரைப்படங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாற்றுத் திரைப்படங்கள், கலைப்படங்கள் போன்ற வகையறாக்கள் இவற்றில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. அந்த வகையில் வெகு மக்களின் மத்தியில் வெற்றி பெற்ற திரைப்படங்களை எடுத்துக் கொண்டது வெகுமக்கள் திரள் கருத்துருவாக்கத்தினை பண்பாட்டு ரீதியிலான புரிதலுக்கு வழி வகுக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பதை விட அத்திரைப்படங் களுக்கு அவ்வமயத்தில் தீவிர இடதுசாரி இதழ்களில் வெளிவந்த விமர்சனங்களும் மதிப்புரைகளுமே மறு வாசிப்பின் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட 16 திரைப்படங்களில் 'பாலம்' என்ற படம் மட்டும் எனக்குத் தனிப்பட்ட முறையில் நினைவில் இல்லை அல்லது பார்க்கவே இல்லையா என்று தெரியவில்லை. மற்ற 15 படங்களும் பார்த்து நன்கு நினைவில் இருக்கும் படங்கள்தான். சிவப்பு மல்லி - 1981ல் தொடங்கி ஏழாம் அறிவு - 2012 வரையிலான காலவரிசையில் படங்களும் படவிமர்சனங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

மேற்படி திரைப்படங்களையும் திரைப்பட விமர்சனங் களையும் ஒரு சேர தொகுப்பாக வாசிக்கும்போது இடதுசாரி சிந்தனை போக்கினையும் வளர்ச்சியையும் காலவரிசை ஏற்றத்தில் உணர முடிகிறது. மட்டுமின்றி மணிகோ.பன்னீர்செல்வத்தின் மறுவாசிப்பானது மேற்படி திரை விமர்சனங்கள் எவ்வாறு அமைப்பு ரீதியான இடதுசாரி சிந்தனைமரபுக்குள் கட்டுண்டு இருந்தது என்பதையும், அடுத்து எந்தெந்த இடங்களில் விமர்சனம் முழுமையற்று இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கிறது. மேலும் ஆசிரியர் தன்னுரையில் குறிப்பிடுவது போல 'புரட்சிகர இயக்கப் பத்திரிகை களுக்கு அரசியல், பொருளியல் துறையில் எதிர்க்க வேண்டிய அம்சங்கள் குறித்து ஏற்பட்டிருந்த தெளிவு, இந்தக் கலாச்சாரத்துறையில் எதுவும் இல்லை' என்ற கோ. கேசவனின் கூற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஆசிரியரின் தன்னுரையும் நிழல். திருநாவுக்கரசின் முன்னுரையும் நூலுக்கு வாசகர்களை கருத்தியல் ரீதியா கத் தயார்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

மார்க்சின் 'தத்துவத்தின் வறுமை' என்ற புகழ்பெற்ற கோட்பாட்டைப் போல, ஆசிரியர் குறிப்பிடும் மாலெ போன்ற நக்சல்பாரி இயக்கங்களின் குறிப்பிட்ட நடவ டிக்கைகளால் 'அரசியலின் தலைமறைவு' ஏற்பட்டதாக பாலம் பட விமர்சனத்திற்கான மறுவாசிப்பில் ஆசிரியர் கூறுவது ஏற்கத்தக்கதும் விரிவான உரையாடலுக்கு உட்பட்டதும் ஆகும்.

இவ்வாறு தனது மறுவாசிப்பில் பெரும்பான்மையாக உள்ள குறையாக ஆசிரியர் குறிப்பிடுவது மார்க்சிய இயங்கியல் பொருள்முதல்வாதத்தின் அடிப்படை யிலும் வரலாற்றுப் பொருள்முதல்வாத்தின் அடிப் படையிலும் வெகுமக்கள் கலாச்சார வடிவமான திரைப் படத்தை அவ்வப்போதைய இடதுசாரி விமர்சகர்கள் அணுகவில்லை என்பது ஒட்டுமொத்த மறுவாசிப்பின் சாராம்சமாகத் தெரிகிறது.

கூடுதலாக மேற்படி திரைவிமர்சனங்கள் மார்க்சியத்தை இறுக்கமான ஒரு கருத்தியலாகவும் எவ்விதமான மாற்று விமர்சனங்களும் மார்க்சியத்திற்கு எதிரானதாக திரும்பிவிடுமோ என்ற உள்ளுறை அச்சமும் அய்யமும் விமர்சனங்களில் இருப்பதையும் இந்நூலில் மணிகோ. பன்னீர்செல்வத்தின் மறுவாசிப்பின் மூலம் தெரிய வருகிறது. இது உண்மையும்கூட.

2000த்தின் முதல் பத்தாண்டுகளின் இறுதிகளிலேயே

இடதுசாரிகளின் திரைவிமர்சனங்களில் வளர்ந்து வரும் அனைத்து விதமான விமர்சனப்போக்குகளையும் கைக் கொண்டு வெகுமக்கள் கலாச்சார பண்பாட்டுத் தள வெளிப்பாடான திரைப்படத்தை விமர்சிக்கும் போக்கு உருவாகிறது. இங்கு பேரா. வீ. அரசு அவர்களின் கூற்றினை கவனத்தில் கொள்ளலாம் - 'வெகுசனப் பண்பு என்பது சமகால மனிதர்கள் பற்றிய புரிதலாக அமைகிறது. வெகுசனப்பண்பாடு என்பது வெகுமக்க ளின் ஊகங்கள், நம்பிக்கைகள், உணர்வுகள், அவர்களது சிந்தனைப் போக்குகள் ஆகிய பல கூறுகளை உள்வாங்கிச் செயல்படுபவை. இவற்றைக் காட்டுவன வாகவே வெகுசன ஊடகங்கள் செயல்படுகின்றன.' (மாற்றுவெளி - ஜூன் 2010).

90களின் இறுதியில் நிறப்பிரிகை போன்ற இதழ்கள் வழி முன்னெடுக்கப்பட்ட வெகுமக்கள் பண்பாட்டு ஆய்வு குறித்த சொல்லாடல்கள் தமிழ்ச்சூழலில் குறிப்பிடத் தகுந்தவை. மேட்டிமை விளையாட்டாக (Elite Game) அறியப்பட்ட மட்டைப்பந்து (கிரிக்கெட் விளையாட்டு) தற்போது வீதிதோறும் ஊர்தோறும் அனைத்துத் தரப்பி னராலும் விளையாடப்படுவதை எவ்வாறு எதிர் கொள்வது? இப்போதும் கிரிக்கெட்டை அது மேல் தட்டினர் விளையாட்டு என ஒதுக்கிவிட முடியுமா? அது ஒரு இடதுசாரியாக மார்க்சிய இயங்கியலை மறுதலிப்ப தாகிவிடாதா?

அது போலவே திரைப்படங்களையும் வெகு மக்கள் பண்பாட்டுக் கருவி என்ற புரிதல் அடிப்படையிலும் மார்க்சிய இயங்கியல் அடிப்படையிலும் கவனித்து விமர்சிப்பதோடு மாற்றம் என்பதை கருத்தளவில் மட்டுமின்றி நமது செயல்பாடுகளிலும் ஏற்பதே இடதுசாரிகளின் அடிப்படைப் பணியாக இருக்க முடியும் என்றே ஆசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் உணர்த்திச் செல்வதாகவே ஒட்டுமொத்த வாசிப்புக்குப் பின் எனக்குத் தோன்றுகிறது.

மற்றொரு எண்ணமும் ஏற்படுவதை தவிர்க்க இயல வில்லை. அதாவது நூலில் வரிசைப்படுத்தப்பட்ட படங்கள் வெளியான காலத்தில் அமைப்பு ரீதியாக இடதுசாரிகளின் கருத்தியல் வளர்ச்சி போன்றவையும் கவனத்தில் கொண்டிருக்கலாமோ என்று தோன்றுவதை தவிர்க்க இயலவில்லை. தற்போதைய வளர்ந்துபட்ட விமரிசன அளவுகோல்களின்படி மறுவாசிப்பு நிகழ்ந் துள்ளதோ என்று தோன்றுகிறது.

ஒரு வெளியீட்டின் முதல் நூல் என்ற அடிப்படையில் நோக்கும்போது பிழையற்ற அச்சு நேர்த்தி பாராட்டு தலுக்குரியது.

ஒரு விசயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். 10ம் பகுதியில் பூலான்தேவி (1996) என்ற தலைப்பில் கட்டுரை வெளிவந்துள்ளது. அப்பகுதி பேசும் படமானது சேகர்கபூர் இயக்கத்தில் வெளியான பண்டிட் குயின் என்ற படத்தின் விமர்சனமே. மாறாக அச்சிடப் பட்டுள்ள தலைப்பு பூலான்தேவி என்றும் அச்சிடப் பட்ட படமானது 1989ல் மசூத்பட் இயக்கத்தில் வெளிவந்த பழைய பூலான்தேவி படத்துடையதாகும். புதிய தலைமுறை வாசிப்பாளர்களுக்கு தவறான தகவலை அளித்திடும் அல்லது சிறு குழப்பத்தை ஏற்படுத்திவிடும் என்பதால் அடுத்த பதிப்பினில் இக்குறைகளையப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.




ஒரு தொகுப்பாக காத்திர இடதுசாரி திரைப்பட விமர் சனங்கள் பதிப்பாக்கியது காலத்தின் தேவையாகும். அவற்றை மறுவாசிப்புக்குட்படுத்தி பதிப்பித்தது புதுமை முயற்சியாகும். தொடரட்டும் அய்யுறுவின் பணி.

ஆசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் சூளுரைத் துள்ளதை மீள இங்கு குறிப்பிட்டு அறிமுகவுரையை முடிப்பது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்: 'மாற்றத்திற்கு உட்படாததைச் சந்தேகி'. 'சந்தேகிக்கும் உரிமையை சனநாயகப்படுத்துவோம்'.



# எல்லைக்கோடு

**முர்ஷித் எ. எம்.**

**சிறுகதை**
**வங்காளத்திலிருந்து ஆங்கில**
**மொழியாக்கம்: சுச்சிதா பட்டாசாரியா**
**தமிழில்: கண்ணன் ராமசாமி**
**மூலக் கதை: 'கோண்டி',**
**மூலப்பதிப்பு: ஜார்கண்டா, க கூகூ ந.**

'மொத்தம் நூத்தி அறுபத்தெட்டு ரூபாய் குடுங்க', சஞ்சிதா புத்தக நிலையத்தின் உரிமையாளர் ஒரு காகிதத்தில் புத்தகங்களை ஒழுங்கமைத்து கட்டியபடி விலையைக் குறிப்பிட்டார்.

பேரக் கச்சேரியில் திறமைமிக்க வாடிக்கையாளர், 'விலையைச் சொல்லிக் குடுங்க. உங்க கடையில ரெகுலரா வாங்குறவன். அறுவது வெச்சுக்குங்க'

விலை பேசுபவர் சாதாரண ஆளில்லை. வெள்ளைக் கரைவேட்டி, முழுக்கை மடித்துக் கட்டிய கிரீம் வண்ண சட்டை. செல்வாக்குள்ள, வளத்தியான ஆளிடமிருந்து வரும் வார்த்தைகள் அவை என மேற்கண்ட உடையலங் காரங்கள் நம்ப வைத்தன. பணக் கட்டு மேல்சட்டைப் பையில் துருத்திக் கொண்டு வெளியே தெரிந்தது. கருங்கூந்தலிடையே வெள்ளியிழை போன்ற நரை மயிர். வியர்வை முத்து முத்தாக நெற்றியில் பூத்திருந்தன. அடிகளை மறைக்கும் கருத்த பம்ப் காலுறை. சஞ்சிதா புத்தக நிலையத்தின் உரிமையாளருக்கு வந்திருப்பவர் நன்கு அறிமுகம். அவர் தான் லோகேனாத் பஸ்திராலய் என்ற புகழ்பெற்ற ரெடிமேட் துணிக் கடையைச் சந்தையை நடத்தி வருபவர். அவர் இன்னும் இரண்டு கடைகளை மையக் கல்கத்தாவில் நடத்திவருகிறார்.

தலைக்கு மேல் சுழலும் காற்றாடி வேலை செய்ய வில்லை. புத்தக விற்பனையாளரின் முதுகில் வியர் வையை உரியாத சட்டை ஒட்டிக் கொண்டிருந்தது. தொள, தொளவென்று தொங்கும் நீலப் பைஜாமா, வாழ்வின் பல்வேறு கொடுமைகளைச் சுருக்கங்களாக வரைந்த முகம், விற்பனையாளரின் அடையாளங்கள். இன்னும் எத்தனை ஆண்டுகாலம் உழைத்து முதுகு நனைந்தாலும் அந்தச் செல்வந்தருக்கு ஈடாக முடியாது.

வேறு வழியில்லை. பேரம் படிய வைத்து தான் ஆகவேண்டும். அவர் தனது வாடிக்கையாளர் என்பது உண்மை தான். புத்தகங்களை அலமாரியில் அடிக்கி வைத்துக் கொண்டே லாபக் கணக்கை மனதில் கூட்டிக் கழித்தார். தனக்குள்ளாக நெளியும் பலவீனத்தைக்

களைய முயன்றார். கூட்டத்தினிடையில் இத்தகைய பேரப் பேச்சு எடுபடாது. இது காய்கறி மொத்த கொள்முதல் கடையுமல்ல. வந்திருப்பவர் பேரம் பேசுவதற்கான காலத்தைச் சரியாகத் தேர்வு செய்துள்ளார்.

அவர் சொன்னார், 'சரி அறுபத்தஞ்சு குடுங்க போது. அவ்வளவு தான் குறைக்க முடியும்'

'அவ்வளவு தானா? ' வாடிக்கையாளருக்கு ஆச்சரியம் கொள்ளவில்லை.

'கல்லூரி பிளாட்பாரக் கடையில் ௩௦% கழிவுக்குப் புத்தகம் கிடைக்கும்'

கழிவு என்ற பேச்சு எடுத்தவுடன் விற்பனையாளருக்கு சுருக்கென்று இருந்தது. ஆனால் பொறுமையாகப் பதில் சொன்னார், 'என்னைப் போல நீங்களும் ஒரு வியாபாரி தான். கொஞ்சம் புரிஞ்சு பேசுங்க'

'அதனால தான் இவ்வளவு கம்மியா கழிவு கேட்டிருக்கேன்'

'உங்க கடையில துணிகளுக்கு எத்தனை சதவீதம் கழிவு தரீங்க?'

'எங்க கிட்ட கமிஷன் என்ற பேச்சே கிடையாது'

'ஆனா மார்ஜின் வெச்சு தானே தொழில் பண்றீங்க? பதினஞ்சு முதல் இருபது சதவீதம் இருக்கும் இல்லையா?'

'ஆமா..அதில்லாம எப்படி?'

'நாங்க கம்பனியிடமிருந்து 40% கமிஷனுக்குப் புத்தகங்கள் வாங்குகிறோம். அதற்கு மேல் ஒரு பைசா வாங்குறதில்ல. இப்போ நீங்க சொல்லுங்க. எப்படி டிஸ்கௌண்ட் சாத்தியம்? கமிஷன் என்ற வார்த்தை தான் இங்கே குழப்பத்துக்குக் காரணம். நீங்க வாங்குற மார்ஜின் போலத் தான் இதுவும் என்று பார்த்தால், இன்னும் சுலபமாகப் புரியும்'

'இந்தத் தகவலை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய? பேக் பண்ணிக் குடுங்க. லேபிள், டைம் டேபிள் எல்லாம் பக்காவா இருக்கணும். பசங்களுக்குப் புத்தகத் தைக் காட்டிலும் அதை ஒட்டத் தான் ஆர்வம் அதிகம். அதுக்கும் சேத்து நான் காசு கொடுக்கனுமா என்ன?'

இனாமாகவே வாழ்க்கையைக் கடத்தும் நபருக்கு தலையாட்டுவதைத் தவிர வேறு சிறப்பான பதில் என்ன இருக்க முடியும்? மீண்டும் அவர் சுயபுராணம் நிற்கவில்லை, 'வருடா வருடம் ஏழை குடும்பங்களுக் குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்குறேனா? அதனால தான் டிஸ்கௌண்ட் கேட்டேனே ஒழிய, எனக்காக இல்ல. உங்களுக்கு அவங்களைத் தெரிஞ்சிருக்கும். மார்க்கெட் தெருவில் ரப்பர் செருப்பு விக்கிறாங்களே ஒரு ஜோடி, அவங்களுக்குத் தான்'

'ஏன் தெரியாது? சில நாட்கள் முன்பு இங்கே வந்தாங்க. ரெண்டாம் வகுப்புப் பாடப்புத்தகம் சிலவற்றை கேட்டு வாங்கிட்டு போனாங்க. அவங்க பாக்கெட்டை துழாவி னதை பார்த்தாலே தெரியுது. அவங்க கிட்ட எதுவும் இல்லன்னு'

'அப்போ உனக்கு அவங்க கஷ்டம் புரியும். சிட்டகாங் கிலிருந்து மூணு வருஷம் முன்னாடி இந்த ஊருக்கு வந்தாங்க. எனக்குச் சொந்தமான ஒரு குடியிருப்பில் வாடகைக்கு அவங்க அறையெடுத்து தங்கியிருக்காங்க. வாடகை வாங்கலைன்னா கோவிச்சுக்குவாங்க. அதனால நான் வேண்டா வெறுப்பா வாங்கிக்கிறேன். முப்பது, நாற்பது ரூபாய் இருந்தா தான் இப்போதெல்லாம் ரூம் வாடகைக்குக் கிடைக்கும். மார்க்கெட் நிலவரம் அப்படி. ரெண்டு பசங்க அவங்களுக்கு. அதில் மூத்த வனை நான் படிக்க வைக்கிறேன். இப்போ அவன் ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறான். புத்தகங்கள் ரொம்ப விலை அதிகமா இருக்கு. அதுக்கு மேல டியூஷன் பீஸ் வேற இருக்கு'

விற்பனையாளரின் கவனம் அந்தக் குடும்பக் கதையைக் கேட்பதற்குத் திரும்ப, விலை பேசுவதில் அவருக்கிருந்த ஆர்வம் குறைந்தது. இந்த நாற்பது வயது மதிக்கத்தக்க அறிவாளியின் மூளை என்ன யோசிக்கிறது என்று அறிய அவருக்கு ஆவல் பிறந்தது. அவர் தான் நினைத்தது போலில்லை, நல்ல மானசுக் காரர் தானோ? செருப்பு விற்பவரின் சோகமான முகத்தை இந்த நபரின் பரந்த நெற்றியில் காண்பது போலவும், அவர் பேசும் போது ஏழை ஜோடியின் வட்டார மொழி நடையை காதால் கேட்பது போலவும் தோன்றியது.

கதை சொன்னதற்குப் பிரதிபலனாகப் புத்தக விலை குறைக்கப்பட்டது. அழுகாச்சி கதை கேட்ட பிறகு லாபக் கணக்கெல்லாம் மறந்து போய்விட்டது. தனக்கும் அந்தச் ஜோடிக்கு உதவும் எண்ணம் உள்ளதென்று சொல்லி வைத்தார். தன் வாழ்க்கையில் பெற்ற பல அடிகளைத் தாண்டி, கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கும் பொதுச் சிந்தனை விற்பனையாளரை அவ்வாறு பேச வைத்தது. அவர்கள் வாங்க முடியாமல் சென்ற மற்ற இரு பாடப் புத்தகங்களையும் நல்ல விலையில் கொடுக்க வாக்குறுதியளித்தார். பேசிக் கொண்டிருந்தவர் சொன்னார், 'நிச்சயமாக. புத்தகத்தின் பட்டியலை எடுத்துக் கொண்டு உங்களைப் பார்க்க வரச் சொல்கிறேன்'

விற்பனையாளர்களை மக்களுக்கு அவ்வளவாகப்

பிடிக்காது. அவர்களில் நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று ஒப்புக் கொள்பவர்களும் கூட அதற்குப் பின்னணியில் லாபக் கணக்கு இருக்கும் என்று காரணம் கற்பிப்பார்கள். எல்லா வியாபாரிகளையும் லாப வெறி தான் இயக்குகிறது என்று எண்ணுவது முறையல்ல.

அவர்களுக்குள்ளும் மனசாட்சி என்ற ஒன்றுள்ளது. அவர்களது வாழ்வையும் உயர்வும் தாழ்வும் சமமாகப் பாதிக்கும். கடையின் ஷட்டரை மூடும் போதும், உயர்த்தும் போதும் அவரது அந்நாளின் உயர்வும் தாழ்வும் முடிவாகும் என்று புத்தக விற்பனையாளர் எண்ணினார். அவரையும் சில தனிப்பட்ட விவகாரங் கள் துன்புறுத்துகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக அவருக்கு நல்ல பெயர். மைய சந்தைப்பகுதியில் இல்லையென்றாலும் அவருடைய கடைக்குத் தொடர்ச்சியாகப் புத்தகம் வாங்க வருபவர்கள் எண்ணிக்கை குறையவில்லை. அவரது வெற்றியின் ரகசியம் வாடிக்கையாளர்கள் தான். முறை யான விலையும், முகமனுடன் வரவேற்பதும் தான் நல்ல வியாபாரிக்கு வெற்றியையும், நற்பெயரையும் தேடித் தரும். சில வாடிக்கையாளர்கள் ஆர்வமிகுதியால் கடைக்குள் புகுந்து மூலை முடுக்குகளை ஆய்வு செய்வர்.

சிலர் பிள்ளையார், லக்ஷ்மி படத்தையோ அல்லது சுவற்றில் தொங்கும் கேலண்டரையோ கவனித்து உள்ளே நுழைவர். சிலருக்கு விற்பனையாளர் எங்கு வசிக்கிறார் என்று அறிய விருப்பமிருக்கும்.

இந்தக் கடையைப் பின்னாலிருந்து இயக்கும் முகம் யார் என்று தெரிந்தால் தான் சிலருக்கு தூக்கமே வரும். உரிமையாளர் இன்னார் என்று தெரிந்தவுடன் 'அக்கடா' என்று ஆகிவிடும்.

அவர் அந்நியராக இருக்கும் பட்சத்தில் கேட்கவே வேண்டாம். எதிர்ப்பார்ப்புக்கும், உண்மைக்குமான தூரம் அதிகமாயிருக்கும் பட்சத்தில் அதை ஏற்க முடியாமல் சில அற்பமான தவறுகளைக் கூட மன்னிக்க மறுக்கிறோம். மனம் அமைதியடையாமல் தவிக்கிறது. அதனால் தான் இத்தகைய பிரச்சனைகளைத் தன் பாணியில் சமாளிக்கச் சஞ்சிதா புத்தக நிலையத்தின் உரிமையாளர் லியாகத் ஹுசைன் முடிவு செய்தார்.

தன்னுடைய பின்புலத்தை அந்த வியாபாரியிடம் சொல்லியிருந்தால் அவர் அதை அப்படியே ரப்பர் செருப்புச் ஜோடியிடம் உளறி விடுவார். பிறகு மொத்த குடியும் கெட்டுப் போகும். அதன் பிறகு என்ன நடக்குமென்றே தெரியாது.

க்ஹாகேன்களை வேரறுத்து, வெளியேற்றி இந்தத் தரிசு நிலத்திற்குள் குடியமர்த்தியவர்கள் லியாகத்தின் சொந்தக் காரர்கள் என்று க்ஹாகேன்கள் நம்ப அதிக நேரம் பிடிக்காது.

அதனை லியாகத் நம்பாமலிருக்கலாம். க்ஹாகேன் மற்றும் அவரது மக்கள் நம்பினர். அதையே லியாகத்தும் எதிர்பார்த்தார். அவர்கள் இந்த நிலத்திற்குள் வந்தவுடன் ஏதாவது அரசியல் கட்சி அவர்களுக்குப் புகலிடம் தரும் என்று. திருவாளர். கான்டி சர்க்கார் அல்லது சரல் பிஸ்வாஸ் அவர்களது சேவகராக வருவார். அந்த ஜோடியில் ஒருவர் அரசியலின் உதவியை நிச்சயம் நாடுவார். அதன் பின்னால் ரேஷன் கார்டு, தலைக்கு மேல் கூரை எல்லாம் கிடைக்கும். அவர்கள் அகதிகள் என்ற பெயரால் அன்போடு அழைக்கப்படுவர். இதெல்லாம் சுலபத்தில் புரியக் கூடியதல்ல. அரசியல்!

கோலாம் கிப்ரியா அல்லது ரஹ்மதுல்லா என்ற பெயர் கொண்டவர் மணற் பரப்பைத் தாண்டி கால் வைத்தால், உடனே சட்டவிரோத அகதி என்று அவர் குறிக்கப்படுவார். உடனே அவரது நெத்திப் பொட்டில் ஒரு துப்பாக்கி குண்டு பரிசாக பதியப்படும். பரிசு என்கிற வார்த்தை இங்கு அக்கிரமம் தான். சிறுவர்கள் கோலி விளையாடும் போது மணற் கோடு கிழித்து ஆடுவது போல, இவர்கள் ஆட்டம் சிறுபிள்ளைத் தனமாக உள்ளது. இறந்தவர்களின் உடலை வண்ணப் புகைப்படமாக அடுத்த நாள் செய்தித் தாளில் விளம்பரப்படுத்துவர்.

அடிபட்டவர்கள், இறந்தவர்களின் எண்ணிக்கைகள் அதில் கொட்டை எழுத்துக்களில் வரும். அப்பாவிகளுக்கு இன்னொரு பெயரும் வழங்கப்படும் – சட்ட விரோத கடத்தல்காரர்கள். கடத்தல்காரர்களுக் கும், ஜவான்களுக்குமிடையில் சண்டை என்று சொன்னால் அத்தோடு முடிந்தது கதை.

சுபம் எழுதப்படும். இத்தகைய ஒருதலைபட்சமான வேரறுப்புகள், நியூட்டனின் மூன்றாவது விதி உலகில் இயல்பாய் செயல்படுவது போல லியாகத்தின் பகுதி யில் சர்வ சாதாரணமாய் நிகழும். உலகில் ஏதோவொரு மூலையில் ஐயாயிரம் பேர் நிலநடுக்கத்தில் சிக்கி இறந்தால், அல்தாஃப்களும், இத்ரீஷ்களும் உடனே செய்தித்தாள்களைப் புரட்டி, தனது நம்பிக்கைக்குரிய வர்கள் அதில் எத்தனை பேர் என்று ஆய்வு செய்து விடுவர்.

க்ஹாகேன்கள் பெற்ற துர்கனவுகளின் திறந்த வெளிப் புண்கள் ஆறுவது அவ்வளவு சுலபம் அல்ல! தாங்களே நீரூற்றி வளர்த்த விதைகள் மரமான பின்பு, அதன் கிளைகளின் வழியே சூழும் புயல் சின்னம், அதை

எத்திசை நோக்கிச் சாய்க்கும் என்று அறிவதில்லை, அநீதிமான்கள். அதன் நிழலில் யார் ஒதுங்கப் போவது என்று அறியாதவர் அவர்கள். அந்த மரம் அழுகும் வாசம் சகிக்காமல் யார் மூக்கைப் பொத்திக் கொள்ளப் போவது என்றும் அறியார். இப்படியாகக் கார்டென் ரீச்சில் காவல் துறையின் தேடுதல் வேட்டையின் போது கொலையுண்ட காஸிம் இறந்தபோது சில வாடிக்கையாளர்கள் லியாகத்தின் முன்பே அவரது மொத்த சமூகத்தையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி ஏசினர். அவரும் இதே கூட்டத்தின் கோஷத்திற்கு ஒத்தூதினார். முடிவில்லாத இத்தகைய வெறுப்புக்குக் காரணக் காரியங்களை அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை. லியாகத்தின் சமூகத்தை அறிந்த சில வாடிக்கையாளர்கள் வேறு வகையில் நடந்ததை அணுக முயற்சிப்பர் – 'ஒரு கொலைகாரன், குற்றவாளி கொல்லப்பட்டதற்காக இத்தனை பெரிய கலவரம் தேவை தானா?' லியாகத் பாபு, இது குற்றவாளிகளை ஊக்குவிப்பதாகாதா? உங்கள் கருத்து என்ன?' என்று கேட்பர். அவர் என்ன பதில் சொல்வார்? ஒரு சமூகத்தின் தனி நபர் செய்த குற்றத்தை தடுப்பது லியாகத் போன்ற கைப்பிடியளவே உள்ள தனி நபர்களின் பொறுப்பு என்று கருதத் துணியும் கேள்வி அது.

ஒரு நகைச்சுவையான சம்பவம். அதை எண்ணிப் பார்க்கும் போது இப்போதும் அவருக்குக் கூசும். காயத்தால் புண்பட்ட அவரது கௌரவம் தனது தனிப்பட்ட அடையாளம் இந்தப் பரந்துபட்ட பிரபஞ்சத்தில் அழித்தொழிக்கப்பட்டுவிடாதா என்று ஏங்க வைக்கும். அவரைச் சுற்றியுள்ள மனிதர்களில் ஒரு சிலருக்கு அவரைத் தெரியும், ஒரு சிலருக்குத் தெரியாது. அவரைத் தெரியாதவர் பாடப்புத்தகத்தின் முகப்பில் உருது மொழியில் எழுதப்பட்ட அறிமுகப் பக்கத்தைப் பார்க்கையில், 'இங்கும் வந்துட்டாங்களா! அவர்களை இங்கிருந்து வெளியேற்றும் காலம்..' என்று பெருமூச்சு விடுவர். அவரைத் தெரிந்தவர் அருகிலிருந்து சைகையால், நிறுத்து என்பதை லியாகத் பார்த்துத் தொலைத்து விடுவார். அன்று இரவு எங்காவது கண்காணாத இடத்திற்குச் சென்று விடலாமா என்று தோன்றும். சமரசம் செய்து கொள்வதற்கு அளவிருக்கும் தானே?

வாழ்நாள் சமரசங்களுக்குப் பின்னர் அவர் தனது பிணைப்புக் கயிற்றின் முனையை அடைந்துவிட்டார். லியாகத் போன்ற ஒரு தனி நபர் அடிப்படைவாத தலைமையின் சர்வாதிகாரத்தின் கீழ் தனது பிழைப்புக்காகப் பழமைவாதத்தில் ஊறியிருந்தார் எனில் அவரை நாம் குற்றம் சொல்ல முடியுமா?

தனது சமூகத் தின் ஆறுதலான அரவணைப்பிற்குள் ஒரு நடுநிலை யாளராய் அவர் முகத்தை மூடிக்கொண்டு சுற்ற வேண்டியுள்ளது.

க்ஹாகேன் சில நாட்கள் கழித்து அவரது மனைவியுடன் வந்தார். கருத்துப் புடைத்த உடல் வாகு கொண்ட அவரது தலை காளான் வடிவிலிருந்தது. லொகேனாத் பாபாவின் முகம் பொறித்த பதக்கம் ஒரு சங்கிலியுடன் பிணைக்கப்பட்டுத் தொங்கியது. சிவப்பு மற்றும் மஞ்சள் நிற சட்டைக்குள் அது மறைந்திருந்தது. சோகக் கீரல்கள் முகத்தில் வியர்வையாய். லியாகத் செறிவுடன் அவரை அணுக்கமாய்ப் பார்த்தார்.

வங்காள மண்ணின் மணம் இன்னும் அவர்களது உடலை விட்டு நீங்கவில்லை. லியாகத்திற்கு வங்காளத்துடன் எந்தக் குறிப்பிடும்படியான பிணைப்புமில்லை. க கூகூ ச கலவரத்திற்குப் பிறகு, அவரது உறவினர்களில் பலர் கிழக்கு வங்காளத்திற்கு இடம்பெயர்ந்தனர். ஆனால் அவரது குடும்பம் இந்தியாவில் தங்கிவிட்டது. ஆயினும் அவருக்கு வங்காளத்துடன் மனதளவில் இருந்த பிணைப்பு மாறவில்லை. ஒரே வகையான மண், ஆறுகள், கிராமங்கள் மற்றும் மொழிகள். லியாகத்தின் குடும்பமும் புயல், மழையின் தாக்கத்தை அனுபவித்து மீண்டு வந்துள்ளது. பேரிடர்களின் மோசமான விளைவுகளின் நினைவுக் கழிவுகளுடன் தான் வாழ்ந்து வருகிறார். வங்காளத்தில் நடக்கும் அனைத்தும் அடுத்த வீட்டில் நடப்பது போல லியாகத்திற்குப் பழக்கமானதாகிப் போனது. அம்மனிதர்களின் வலிகள் அனைத்தும் அவரது மனதையும் எந்த விதப் போராட்ட உணர்வுமின்றித் தைத்தன. அவர்களது வட்டார மொழியில் பிழையில்லாமல் பேசுமளவுக்கு அம்மக்களின் வாழ்வைக் குறித்துக் கேட்டறிந்திருக்கிறார்.

'உங்க ஊர் சிட்டகாங் தானே? எந்தக் கிராமம்?'

'சரி! தால்காட்டுக்கு அப்பாலுள்ள தெற்கு புஷ்யி தான் எங்க கிராமம்'

'இந்தியாவுக்கு வந்து எவ்வளவு மாதங்கள் ஆகிறது?'

'மூன்று வருடங்கள்'

'எதையாவது காப்பாற்றிக் கொள்ள முடிந்ததா? அல்லது, அனைத்தும் போச்சா?'

'எதுவும் இல்லை. சூறையாடல் கட்டவிழ்த்து விடப்பட்ட பிறகு எதைக் காப்பாற்ற முடியும்? எங்களுடைய அடையாளமே ஒரே இரவில் காணாமல் போனது. அந்தக் கயிறு அந்துப் போச்சு. மாடு, கிடங்கில் சேமிக்கப்பட்ட அரசி, கலப்பை எல்லாம் காணோம். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். என்னுடைய சகோதரர்கள் இருவர் இன்று வரை காணவில்லை. திருடர்களைப்

போல இந்தியா வந்து சேர்ந்தோம். ரஜத் பாபு உதவி யிருக்கவில்லை யென்றால் எங்கள் நிலை என்னவாகி யிருக்கும் என்று தெரியாது'

லியாகத்தின் அகண்ட தாடை மூடிக் கொண்டது. எதிர் வரும் புயலிற்கு க்ஹாகேனின் கண்கள் முன்னறிவிப்புச் செய்தன. அவரது மாணவி இடைமறித்தார், 'பழசை பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை. நிறுத்துங்க'

லியாகத் சொன்னார், 'பேசட்டும். பாரம் குறையட்டும்'

'சரி தான் டாடா, இந்தக் கதைகளைக் கேட்க இன்று யாருக்கு நேரமும், பொறுமையும் இருக்கு? இன்றைய தேதிக்கு இது போதும், நான் இன்னொரு நாள் வந்து பேசுறேன். என் கடையை அப்படியே போட்டுவிட்டு வந்திருக்கிறேன்...'

லியாகத் தனது சூழலைப் புரிந்து கொண்டு விரைவாய் இயங்கினார். புத்தகங்களை விரைவாகப் பொதிந்து அவர்களிடம் கொடுத்தார், 'இவற்றை எடுத்துச் செல்லுங்கள். இந்த அங்கிள் குடுத்த கிப்ட் என்று உங்கள் பையனிடம் தெரிவித்து விடுங்க'

'பணமே இல்லாமல் தருகிறேன் என்கிறீர்களா? முற்றிலும் ஃப்ரீயா?'

'இல்லை. கல்வியாண்டு தொடக்கத்தில் நானும் இலவச புத்தகங்கள் கொடுக்கலாம் என்றிருக்கிறேன். நீங்கள் தான் முதல் பயனாளி'

'டாடா, ரொம்பச் சந்தோஷம். முன்ஜென்மத்துல நாம ரெண்டு பேரும் சகோதரர்களா இருந்திருக்கணும். பேச்சு வாக்கில் மறந்துவிட்டேன்.. உங்க பேரு?'

லியாகத்தின் முகம் வெளிறிப்போனது. க்ஹாகேன் தனது பெயரைக் கேட்டவுடன் புத்தகத்தைத் தூக்கி யெறிந்து விடுவாரா? பொலித்தனம் கிழிந்து வெளிப் படும் அடையாளத்தை ஏற்றுக் கொள்வாரா இந்தக் க்ஹாகேன்? எந்த முடிவுக்கும் வர முடியாத காரணத் தால், உண்மையிடம் தஞ்சம் புகுந்தார். அதற்கு முன்பாக அவர் சொன்னார், 'என் பெயரை சொல்வேன். ஆனால் பெயரைக் கேட்ட பின், புத்தகங்களைத் திருப்பித் தரக் கூடாது'

அவர் சொல்வதன் அர்த்தம் புரியாமல் க்ஹாகேன் விழித்து நின்றார்.

'இல்லை டாடா, என்ன சொல்றீங்க? என் பையனுக்கு நீங்க மாமா..இதுக்கு மேல என்ன வேணும்?'

'எனது பெயர் லியாகத் ஹுசைன்!'

க்ஹாகேனின் உடல் நடுக்கத்தால் அவரது கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த பதக்கம் அதிர்ந்தது. லியாகத் அவரது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முயன்றார். தலை தானாக நிலத்தை நோக்கியது. க்ஹாகேன் தனது மனைவியைத் திரும்பிப் பார்த்தார். இத்தனையாண்டு கால வாழ்வில் எதிர்கொள்ளாத சூழல் இது.

விரைவாகத் தனது இரு கைகளை லியாகத்தின் கைகளை அபகரிக்கும் வகையில் பற்றிக் கொண்டார் க்ஹாகேன். 'நீங்கள் யாரென்று தெரியாமல் ஏதாவது லூசு தனமா பேசியிருந்தா மணனிச்சிடுங்க, டாடா'

'இல்ல..இல்ல. என்னைத் தப்பா நெனச்சுக்காதீங்க', அவர்களது நன்னடத்தையைக் கண்டு லியாகத் உளம் மகிழ்ந்தார். 'என் பெயரை மறைத்துப் போலியாக நடித்த குற்றத்திற்காக நான் தான் உங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்'

'குற்றமேதுமில்லை டாடா. எங்க மேல நீங்க காட்டும் கருணையை நான் மறக்கவே மாட்டேன்'

'போதும்', க்ஹாகேனை பாதி வரியில் குறுக்கிட்டார் லியாகத். முதலில் அவர் அறிய விரும்பியது, க்ஹாகேன் அவரைப் புரிந்து கொண்டாரா? என்ற கேள்விக்கு பதில் எதிர்புறத்திலிருந்து வந்தது.



'சிலர் விலாங்கு மீனை பாம்பு எனத் தவறாக நினைத்துக் கொள்வர். சிலர் அதைப் பல மசாலாக்கள் தடவி பொறித்துச் சாப்பிடுவர். எனக்கு ஒன்றை இன்னொன்றிலிருந்து பிரித்தறியத் தெரியும்'

அவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு, க்ஹாகேனின் வார்த்தைகளை மீண்டும் அசைபோட்டுப் பார்த்தார் லியாகத். அவ்வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து புத்துணர்ச்சியை உள்ளிழுத்து, இறகாகிப் போனார் லியாகத். க்ஹாகேன் போகும் முன்பு என்ன சொன்னார்? அவரது பாட்டி அடிக்கடி சொல்வதைத் தான் சொன்னார், 'க்ஹாகேன் பாபு, அவதானி... விவாதி.. பரஸ்பரம் புரிந்து கொள்! இந்தப் பழக்கத்தை எப்போதும் கை விடாதே!'. தனது விற்பனை கவுன்டரின் பின்னாலிருந்து வெளியே வந்தார் லியாகத். க்ஹாகேன் ஏற்கனவே சற்றுத் தூரம் தள்ளிச் சென்று விட்டிருந்தார். அவரது உடலசைவின் சைகைகள் மகிழ்ச்சியையும், சகோதரத்துவத்தின் மீதான நம்பிக்கையையும் உணர்த்தின. அந்தக் காளான் தலை கூட்டத்தில் எங்கோ மறைத்துவிட்டது!



# தமிழுக்குப் பெருமை சேர்த்த வெண்கலப் பெண்

சமீபத்தில் இரண்டு பெண்கள் மனம் கவர்ந்தவர். ஒருவர் வித்யா ராமராஜ். மற்றவர் பிடி உஷா.

ஜப்பான் நாட்டில் நகோயாவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. அதன் 9 வது நாளில் இந்தியாவுக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த வித்யா ராம்ராஜ் ஒரு வெட்கலப் பதக்கம் வென்று தந்துள்ளார். இந்த பதக்கத்தின் ஊடாக தடை தாண்டும் ஓட்டத்தில் பி.டி. உஷாவின் 40 ஆண்டுகட்கு மேலான தேசிய சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் 55.41 விநாடி களில் கடந்து இச்சாதனையை செய்துள்ளார் வித்யா. பிடி உஷாவின் சாதனை 55.42 விநாடிகள். 2023 இல் சீனாவில் நடைபெற்ற ஆசிய தடகளப் போட்டியில் பிடி உஷாவின் சாதனையை சமன் செய்த வித்யா, இப்போது ஒரு விநாடியில் அதை முறியடித்துள்ளார்.

தன் சாதனை முறியடிக்கப்பட்டதற்கு நமது பிடி உஷா வருத்தப்படவில்லை. மாறாக பெருமைப் படுகிறார்.

'சாதனைகள் முறியடிக்கப்படுவதற்கே உள்ளன. ஒரு வீரருக்கு தான் உருவாக்கிய எல்லையைக் கடந்து அடுத்த தலைமுறை செல்வதைப் பார்ப்பதைவிட வேறு எந்த வெகுமதியும் இருக்க முடியாது. விளையாட்டு வீரர்களாகிய நாம், நம்மை நாமே சவால் விடுத்துக் கொள்ளவும், எல்லைகளை விரிவுபடுத்தவும், இறுதியாக, நாம் இந்த விளையாட்டில் நுழைந்தபோது இருந்த நிலையை விட அதை மேம்பட்ட நிலையில் விட்டுச் செல்லவும் போட்டியிடுகிறோம்.

ஒரு இளம் விளையாட்டு வீரர் பல தசாப்தங்களாக நீடித்திருந்த ஒரு மைல்கல்லைக் கடக்கும்போது, அது அந்த வீரருக்கு மட்டுமல்ல, அந்த விளையாட்டுக்கே பெருமை சேர்க்கும் தருணமாக அமைகிறது.' என பிடி உஷா தன் எக்ஸ் தளப்பணிவில் குறிப்பிட்டுள்ளார்.

'ஒரு சாதனையின் மிகச்சிறந்த மரபு,

அது எவ்வளவு காலம் நிலைத்திருக்கிறது என்பதில் இல்லை. மாறாக, அதைவிடச் சிறந்து விளங்க வேண்டும் . அடுத்த தலைமுறை விளையாட்டு வீரரை அது எவ்வாறு ஊக்கப்படுத்துகிறது என்பதில்தான் அந்த சாதனை உள்ளது!' என்கிறார் பிடி உஷா.

எந்த ஒரு துறையிலும் பழைய சாதனைகள் முறியடிக்கப் படும்போது, முந்தையோர் மிகப் பெருந்தன்மையோடு அவர்களை அணைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போது அவர்கள் மேலும் மரியாதைக்குரியவர்கள் ஆகிறார்கள்.

 விசாகன்

## ஆயிரம் ரூவாய் அபராதம் தாங்காது: ஹபீபி திரைப்படத்தை முன்வைத்து

லைலா மற்றும் எ செப்பரேசன் ஆகிய ஈரான் படங்களை இந்த நேரத்தில் நினைவு கூர்கிறேன். அந்தப் படங்கள் ஒரு குறிப்பிட்ட விசயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதைத் திரைக்கதையாக்கி உருவான படங்களாகும். இவ்விரண்டு படங்களிலும் உள்ள இயல்புத் தன்மையும் கதை நேர்த்தியையும் கொண்டுள்ளதோடு மாத்தரமல்ல, குறிப்பிட்ட ஒரு விசயத்தை மட்டுமல்லாது ஒரு ஐம்பதாண்டு கால ஒரு மதக்குழுவின் (தமிழ் இஸ்லாமியர்) வாழ்வியலை, அதனுடைய பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி பின்புலத் தையும் பிற்போக்குத் தனங்கள் கேள்விக்குள்ளாக் கப்பட்டு கட்டுடைக்கப்பட்டு முற்போக்கை நோக்கிப் பயணிக்கின்ற தருணங்களையும் கூட சேர்த்து அதைத் திரைக்கதையாக்கி செம்மையாக வெளிவந்திருக்கிறது 'ஹபீபி' திரைப்படம்.

பழமைவாதத்திலிருந்து விடுபட முடியாமல் கரடு தட்டிப் போன மனத்துடன் இயந்திரத்தனமான வாழ்விற்குள் தன்னை மூழ்கடித்துக்கொண்ட யூசுப் (கஸ்தூரிராஜா) என்கின்ற குடும்பத் தலைவரை 1983ம் ஆண்டு காட்டுவதில் தொடங்கும் படம் அவருடைய மகன் அபுதாஹீரின் திருமண ஏற்பாடு-தடங்கல் என 2023ம் ஆண்டு க்ளைமாக்சை எட்டுகிறது படம். இதனூடாக யூசுபின் தம்பி வெளிநாட்டிற்குப் பிழைப்புக்காகச் செல்லுதல், அபுதாஹீரின் காதல், கைத்தறித் தொழில் நசிந்து போதல் என கதைகள் பல கதைகள் பின்னப்பட்டுள்ளது.

ஆண்களை மையமாக வைத்து படம் உருவாக்கப் பட்டுள்ளது என்பது போலத் தோற்றமளித்தாலும் உண்மையில் பெண்களே பிரதான பாத்திரங்களாக இருக்கிறார்கள். யூசுப்பின் மனைவி, யூசுப் தம்பியின் மனைவி, யூசுப்பின் மகன் காதலிக்கும் பெண் (நிலோஃபர்), யூசுப்பின் மகனுக்குப் கட்டிவைப்பதற் கெனப் பேசப்படும் பெண் இந்த நான்கு பெண்கள்தான் படத்தையும் கதையையும் நகர்த்திப் போகிறார்கள். கால ஓட்டத்தில் முற்போக்கு சிந்தனையின் வளர்ச்சிப் படிநிலைகளையும் இந்த நான்குப் பெண்களிடம் காணமுடிகிறது. ஆரம்பத்தில் மசூதியைக் காட்டினாலும் அதிலிருந்து மெதுவாக விலகி நூலகத்தை மையப்படுத்தியும் மார்ட்டின் லூதர் கிங்கின் வாசகங்களைக் காட்டுவதிலும் பெண்கள் பேசுவதற்கே தயக்கப்படும் சூழல் மாறி பொது மேடையில் அவர்களைப் பேசவைப்பதிலும் இயக்குநரின் சிந்தனை முன்நிற்கிறது.

காட்சிகளை மீறிச் செல்லாத பின்னணி இசை பார்வை யாளர்களைச் சோர்வடையச் செய்யாமல் நகர்த்திச் செல்கிறது. ஆங்காங்கே வைக்கப்பட்ட பாடல்களும் சுமையாக இல்லாமல் கதையோட கலந்தே ரசிக்கச் செய்கிறது. காமிராக் கோணங்கள், காலமாற்றக் காட்சி யமைப்புகள் இவைகளில் இயக்குநரின் திறனை அறிய முடிகிறது. ஒரு இடத்தில் கூட திணிப்புகள் இல்லை என்பதுதான் மிகவும் முக்கியமாகப் பார்க்க வேண்டி யுள்ளது, அதுவே பாராட்டத்தக்கதாயும் இருக்கிறது.

வழக்கமான சினிமாவாக இந்தப் படத்தைப் பார்க்கிற வர்களுக்கு, படத்தில் விறுவிறுப்பில்லை, திருப்பு முனைகள் இல்லை, வசனங்களில் வீரியம் இல்லை என்று தோன்றுவது இயல்புதான் என்பதோடு ஏமாற்ற மடையவும் கூடும். ஆனால் மக்களின் உண்மையான வாழ்வியலில் இதுபோன்று அம்சங்கள் இருக்காது என்பதுதான் எதார்த்தம்.

அந்த எதார்த்தத்திற்கு முன்னுரிமை தந்திருக்கிறார் இயக்குநர் மீரா கதிரவன். வழக்கமான ஒரு சினிமா வாக்கும் ஒரு பொதுப்புத்தியோடு ட்விஸ்ட், பஞ்ச் டயலாக், ஃபைட், ஆக்சன் என்று கிளம்பாமல் ஒரு இணையற்ற மனவலிமையோடு சமரசத்திற்கு ஆட்பட்டு விடாமலிருந்ததுதான் மீரா கதிரவனின் வெற்றி என்று சொல்ல முடியும்.

சரி, இவைகளையெல்லாம் தாண்டி பார்வையாளர் களுக்கு இந்தப் படம் என்ன சொல்ல வருகிறது? ஒரு கலைஞனின் கடப்பாடு என்ன, சமூகத்தின் மீதான அவனுடைய பார்வை என்ன, மக்களுக்கான கலையை அந்த மக்களுக்காக எவ்வாறு பயன்படுத்துவது, ரசிக



மனத்தை எதன் போக்கில் கொண்டு செல்வது, ஒரு படைப்பின் நேர்மை என்றால் என்ன என்பது பற்றியெல்லாம் யோசிக்கச் சொல்கிறது. லைலா படத்தில் க்ளைமாக்ஸ் காட்சியில் ஒரு குழந்தையைப் பார்த்து புன்னகைக்கின்ற கதாநாயகியின் கண்களைப் போல, எ செப்பரேசன் படத்தின் கிளைமாக்சில் கணவன் மனைவியைக் காட்டி உறைகின்ற காட்சியைப் போல ஹபீபி படமும் பல சிந்தனைகளைக் கிளர்த்துகிறது.

நிலோஃபரின் அதியற்புத புன்னகையோடு படத்தை முடித்திருக்கின்ற மீரா கதிரவனுக்கும் படக்குழு வினருக்கும் வாழ்த்துகள்!

## ஹபீபி படம் குறித்த மேலும் ஒரு பார்வை: முகிலன்

நேற்று ஹபீபி பார்த்தேன், எவ்வித அரிதாரமும் இல்லாமல் இசுலாமிய மக்களின் வாழ்வியலை செதுக்கி உள்ளார் தொடர்ந்து இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாக மட்டுமே பதிவு செய்து வந்த சினிமாவில், அதனை அப்புறப்படுத்தி விட்டு அவர்களின் உழைப்பை, காதலை, பண்பை, கலாச்சாரத்தை நதி போல திரையில் நகர செய்துள்ளார் இயக்குநர்.

நான்கு சுவர் வீடு அல்ல என்று இறுதியில் கதையின் நாயகி பேசும் வசனம் மதம் கடந்து, இறுகி கிடக்கும் மொத்த சமூகத்தின் மீது ஒரு முக்கியமான கல்லெறிதல்! இயக்குநர் மீரா கதிரவனுக்கும் அவரது குழுவிற்கும் அன்பும், வாழ்த்துக்களும்.




# ஆப்பிரிக்க இளஞ்சாரல்

*இளஞ்சாரல்: பொது அறிவு பத்து!*

*பகுதி 1: கேள்விகள்*

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

பனிப்போர் (Cold War) காலத்தில் எந்த இரண்டு வல்லரசு நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராகப் போட்டியிட்டன?

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் (UNSC) எத்தனை நிரந்தர உறுப்பினர்கள் உள்ளனர்?

'NATO' என்ற சர்வதேச அமைப்பின் விரிவாக்கம் என்ன?

சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice - ICJ) எங்கு அமைந்துள்ளது?

ஐரோப்பிய ஒன்றியத்தின் (European Union) பொது நாணயம் (Currency) என்ன?

தற்காலத்தில் உலகின் மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக விளங்கும் இரண்டு நாடுகள் எவை?

'BRICS' அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் தொடக்கக் கூட்டமைப்பில் உள்ள நாடுகள் எவை?

பாலஸ்தீனப் பிரச்சினை எந்தப் பிராந்தியத்தின் அரசியலுடன் தொடர்புடையது?

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் எந்த ஆண்டு கையெழுத்தானது?

*பகுதி 2: பதில்கள்*

நியூயார்க் (New York), ஐக்கிய அமெரிக்கா.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) மற்றும் சோவியத் யூனியன் (USSR).

5 நிரந்தர உறுப்பினர்கள் (அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ்).

North Atlantic Treaty Organization (வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு). *

ஹேக் (The Hague), நெதர்லாந்து.

யூரோ (Euro).

அமெரிக்கா மற்றும் சீனா.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா (தென்னாப்பிரிக்கா பின்னர் இணைந்தது).

மத்திய கிழக்கு (Middle East) பிராந்தியம்.

1968 ஆம் ஆண்டு (நடப்புக்கு வந்தது 1970).

# டோரதி: ஒரு சிறு பார்வை: கரிகாலன்

டோரதி படத்தின் உச்க்காட்சி . கார்த்தி (ரிஷிகாந்த் ) சுப்புவை (சனந்த்) முத்தமிடுவது. இதை சராசரி ஆண்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. படத்தில் இந்த நிகழ்வு 90 களில் நடைபெறுவதாகக் காட்டுகிறார் இயக்குநர். 2026 மாறியிருக்கிறது! என கார்த்திக் சுப்புராஜ் நினைக்கிறார். ஆனால் இங்கு பலர் இன்னும் 90 களைத் தாண்டவில்லை! என்பதை உணரமுடிகிறது. உலகின் பெரும்பாலான மதங்களில் கலாச்சாரங்கள், ஒரே பாலின ஈர்ப்பு மற்றும் உடல் ரீதியான வெளிப்பாடு களை பாவமாக, விலக்கப்பட்ட ஒன்றாக (T a b o o ) போதிக்கின்றன.
தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்ட இந்த நம்பிக்கைகள், இதுபோன்ற காட்சிகளைப் பார்க்கும் போது உடனடி எதிர்ப்பையோ அல்லது அதிர்ச்சி யையோ ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக மனிதர்கள் அனுபவிக்கும் கலாச்சார அதிர்ச்சி , Homophobia வை (அச்சத்தை) உருவாக்குகிறது.

பொதுச் சமூகம் புரிந்து வைத்திருப்பதுபோல பாலினப் பாத்திரங்கள் என்பவை இயற்கையானவையோ , நிலையானவையோ அல்ல. அவை மொழி, சமூகம் மற்றும் தந்தைவழி அமைப்பால் கட்டமைக்கப் படுபவை. மனித மனமும் அடையாளமும் தொடர்ச்சியாக மாறிக் கொண்டே இருக்கும் இயல்புடையவை. இறுக்கமான பாலின வரம்புகளை உடைத்து, ஒவ்வொரு தனிநபரின் தனித்துவமான வெளிப்பாட்டிற்கு மதிப்பளிப்பதே சமகால கலாச்சாராமாக கருதப்படும்.

ஆண்மை (Masculinity) மற்றும் பெண்மை (Femininity) என்பவை நிலையான எதிர் எதிர் துருவங்கள் அல்ல. ஆண் மற்றும் பெண் இருவருக்குள்ளும் இந்த இரு தளங்களும் கலந்தே இருக்கின்றன. எனவே, அவை ஒவ்வொரு மனிதருக்குள்ளும் மாறி மாறி வெளிப் படுபவை என்கிறார் ஜூலியா கிறிஸ்துவா. பாலின அடையாளங்கள் என்பவை முடிவுற்ற வடிவம் அல்ல.

மனிதர்கள் தொடர்ந்து உருமாறிக் கொண்டே (Subject-in-Process) இருக்கக் கூடியவர்கள். ஆண் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண் இப்படித்தான் இருக்க வேண்டும். என்று சமூகம் தீர்மானிக்கும் பாலினப் பாத்திரங்கள் செயற்கையானவை.




மனித உணர்வுகளையும் அடையாளங்களையும் அவ்வாறு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்க முடியாது.

சமூகம் தனது எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், தனது சட்ட திட்டங்களை நிலைநிறுத்தவும் சில விஷயங்களை 'அருவருப்பானது' அல்லது 'விலக்கப்பட்ட ஒன்றாக' ஒதுக்கி வைக்கிறது. தந்தைவழிச் சமூகம் பெண்களையும், பெண்ணிய உணர்வுகளையும், சில பாலின வெளிப்பாடுகளையும் இவ்வாறு ஒதுக்கி வைப்பதன் மூலமே தனது அதிகாரத் தன்மையைத் தக்கவைத்துக் கொள்கிறது .

விறைப்பு, வீரம், உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமை

(*Stoicism*) போன்றவையே ஆண்மை, என நம்பும் தந்தைவழிச் சமூக மனம், டோரதிக்கு கார்த்தி தரும் முத்தத்தை ஓர் ஆண் மற்றொரு ஆணுக்குத் தரும் முத்தமாகப் பார்க்கிறது. ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. கார்த்தி,சுப்புவாக நடிக்கும் இருவர்தாம் ஆண்கள். ஆனால் இப்போது சுப்பு இல்லை. அந்த உடல் டோரதியாக பரிணமித்திருக்கிறது. அதை சுப்புவாகவே எண்ணவைப்பது ஆண் மொழியும் அது கட்டமைத்த பண்பாடும்தான். ஒருவேளை சுப்பு டோரதியாக மாறாமல், இருவருமே ஆண் என்கிற நிலையில், தற்பாலின ஈர்ப்பின் காரணமாக முத்த மிட்டிருந்தாலும் தவறில்லை.




*SRM* அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பேராயம் சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் தமிழ்ப்பேராய விருதுகளின் 13-ஆவது விருது வழங்கும் விழா, 30.09.2026 அன்று நடைபெற்றது. தமிழ் மொழியின் இலக்கிய மற்றும் பண்பாட்டு மேன்மைகளைப் போற்றும் வகையில், தமிழ் இலக்கியப் படைப்பாளிகள், தமிழ் இதழ்கள், தமிழ்ச் சங்கங்கள் மற்றும் தமிழறிஞர்களை அங்கீகரிக்கும் நோக்கில் தமிழ்ப்பேராயம் ஆண்டுதோறும் பல்வேறு பிரிவுகளில் விருதுகளை வழங்கி வருகிறது. விழாவில் புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது, பாரதியார் கவிதை விருது, அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது, ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு விருது, ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அறிவியல்தமிழ் மற்றும் தொழில்நுட்ப விருது, பரிதிமாற் கலைஞர் தமிழ் ஆய்வறிஞர் விருது, முத்தமிழ் அறிஞர் கலைஞர் சமூகநீதி விருது, சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருது, தொல்காப்பியர் தமிழ்ச்சங்க விருது மற்றும் பாரிவேந்தர் பைந்தமிழ் வாழ்நாள்சாதனையாளர் விருது ஆகியவை வழங்கப்பட்டன.

அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது எழுத்தாளர் கொ.மா.கோ. இளங்கோ அவர்களுக்கு 'சுழற்காற்றாக வந்த சிறுவன்' படைப்பிற்காக வழங்கப்பட்டது. நமது ஆப்பிரிக்கா தமிழ்ச்சாரலின் ஆசிரியர்களில் ஒருவரும், தொடர்ந்து சிறார் இலக்கிய உலகில் விண்மீனாக மிளிரும் திரு கொ. மா. கோ. இளங்கோ அவர்களை பாராட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறது, ஆப்பிரிக்கா தமிழ்ச்சாரல். தூய அறிவியல் உண்மைகளை வகுப்பறையோடு சுருக்கிவிடாமல், சுவாரசியமான கதையின் வழியாகக் குழந்தைகளுக்குக் கொண்டு சேர்க்கும், அறிவியல் ஆர்வத்தையும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் (சூழல் காப்போம்) தூண்டும் வகையில் கற்பனை நயத்துடன் இது எழுதப்பட்ட, சுழற்காற்றாக வந்த சிறுவன் என்ற நூலுக்கு கிடைத்த பரிசு, அது கொண்ட கருப்பொருளுக்கு மேலும் வலுசேர்க்கிறது.

-ஆசிரியர் குழு

# அரசியலை 'வேடிக்கையாகவும், நாகரிகமாகவும், கவர்ச்சியாகவும்' மாற்றுதல்: கென்யாவின் அடுத்த தேர்தலை ஜென் Z தலைமுறை எப்படி வடிவமைக்கக்கூடும்



கென்யாவில் வாக்களிப்பதை அடெம்பா ஆலன்ஸ் ஒரு 'கவர்ச்சிகரமான' விஷயமாக மாற்றி வருகிறார்.

மாணவப் பத்திரிகையாளராக இருந்து குடிமைப் பணி ஆர்வலராக மாறிய இவர், இந்த ஆண்டின் தொடக்கத்தில் சமூக ஊடகங்களில் வாக்காளர் பதிவு இயக்கத்தைத் தொடங்கினார். இளைஞர்களைக் குறிவைக்கும் நோக்கில், இசை மற்றும் நகைச்சுவையுடன் கூடிய கவர்ச்சியான செல்ஃபிக்களைப் பயன்படுத்தினார்.

இதன் விளைவு அவரையும், கென்ய அரசியலைக் கவனிக்கும் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது – பதிவு காலம் முடிவதற்குள், நாடு முழுவதும் 26 லட்சம் புதிய வாக்காளர்கள் பதிவு செய்திருந்தனர். அடுத்த சுற்றில் மேலும் 23 லட்சம் பேரை இதில் இணைப்பதை அவர் நோக்கமாகக் கொண்டுள்ளார்.

"இது ஜென் Z தலைமுறையின் அரசியல் செய்யும் பாணியாக இருந்தது," என்று அவர் என்னிடம் கூறுகிறார். "வேடிக்கையாக, நாகரிகமாக, கவர்ச்சியாக, நாகரீகமாக. நாங்கள் இதைச் சுற்றி உருவாக்கிய பரபரப்பின் காரணமாக, மக்கள் இதைத் தவறவிட்டுவிடுவோமோ என்ற அச்சம் இருந்தது. எல்லோரும் இதில் ஈடுபட விரும்பினர்." 1990-களின் பிற்பகுதியிலும் 2000-களின் முற்பகுதியிலும் பிறந்த மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் 'ஜென் Z ' தலைமுறை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெரும் போராட்டங்களுடன் களத்தில் இறங்கியது. அந்தப் போராட்டங்கள், பரவலாக விரும்பப்படாத ஒரு வரி மசோதாவிலிருந்து அரசாங்கத்தைப் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தின. ஆனால், அவர்களின் வெற்றியைத் தொடர்ந்து நடந்த காவல்துறை அடக்குமுறையில், டஜன் கணக்கான போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போனார்கள்.

இப்போது, ஊழல் மற்றும் காவல்துறையின் கொடூரச் செயல்களில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டும் அரசியல் அமைப்பின் மீது கோபமடைந்த பல இளம் கென்யர்கள், வீதிகளிலிருந்து வாக்குப்பெட்டிக்கு மாறத் திட்டமிட்டுள்ளனர்.

மேலும்,
ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எண்ணிக்கையும் அவர்களிடம் உள்ளது - வாக்களிக்கும் வயதுடைய கென்யர்களில் 30%-க்கும் அதிகமானோர் 35 வயதுக்குக் குறைவானவர்கள்.

ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ மிகவும் பலவீனமாகத் தெரிகிறார் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## நூல் அறிமுகம்:
## மதுரை மு.அன்புச்செல்வன்

# கவிப்பித்தன் எழுதிய
# ‘சேங்கை’

நாம் நாள்தோறும் சாலைகளில் பயணிக்கும் போது நம்மைக் கடந்து செல்லும் அல்லது நாம் கடந்து செல்லும் லாரிகளையும் அதன் ஓட்டுனர்களையும் இத்தனை காலத்தில் ஒரு முறையாவது வசை மொழிந்திருப்போம். காரணம் அவற்றின் வேகமும் சீற்றமும் - கூடுதலாக அதன் பயமுறுத்தும் பிரமாண்ட உருவமும் கூட அந்த வசை மொழிதலின் உளவியல் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் எனக்கெல்லாம் தெரிந்து ஒரு முறை கூட பாவம்யா இந்த லாரிக்காரன் என்று தோன்றியிருக்குமா என்பது கேள்விக்குறியே. ஆனால் கவிப்பித்தனின் இந்த சேங்கை புதினத்தை வாசித்து முடித்த பின்னர் லாரிகளை நாம் பார்க்கும் பார்வை சற்றேனும் இளகிய மனதுடன் மாறியிருக்கும் என்பது மிகையல்ல.

9 0 களின் இறுதியில், சென்னையில் பாவனா லாரி டிரான்ஸ்போர்ட் என்ற லாரி புக்கிங் அலுவலகத்தில் பணி புரியும் மணி மற்றும் சுந்தர் என்ற புக்கிங் கிளார்க்குகளின் வாழ்வின் வழியே கதை பயணிக்கிறது. கூடுதலாக, தாங்கள் வாழ்ந்த ஊரில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் வேலூர் அருகில் பஞ்சம் பிழைக்க வந்த பெத்தவாடன், குன்ட்டிவாடன் என்ற அருந்ததியக் குடிகளின் கதையும் இணையாகச் சொல்லப்பட்டு வருகிறது. கதையின் ஓட்டத்தில் இரு கதைகளும் ஓரிடத்தில் முயங்கி ஒன்றாகிறது.

லாரிகள், அதன் ஓட்டுநர்கள், கிளிகள் என்றழைக்கப் படும் கிளீனர்கள், பத்திருபது லாரிகள் வைத்திருக்கும் பெரு முதலாளிகள், ஒன்றிரண்டு லாரிகள் வைத்திருக் கும் சிறு முதலாளிகள், லாரிகளை லோடுகள் ஏற்றி அனுப்ப புக்கிங் செய்யும் அலுவலகம், அங்கு பணி புரியும் மேலாளர், புக்கிங் கிளார்க், செக்குகளுக்கு உட னடியாகப் பணம் வழங்கும் பைனான்ஸ் நிறுவனங்கள், லாரிகள் லோடு ஏற்றும் இறக்கும் தொழிற்சாலைகள் அவற்றின் நடைமுறைகள் என நமக்குத் தெரியாத ஓர் உலகத்தின் விபரங்கள் திகட்டத் திகட்ட புதினத்தில் விரவிக் கிடக்கிறது. அதற்காக கவிப்பித்தன் எடுத்த முயற்சிக்கும் அதை கதையின் ஓட்டத்தில் துருத்தாத வண்ணம் பயன்படுத்தியமைக்கும் வாழ்த்துகள்.

அருந்ததியர்களின் வாழ்முறையும் உழவுப்பணிக்கு அவர்களின் தோல் அறிவு எவ்வாறு பயன்படுத்தப் பட்டது என்பது தொடர்பாகவும் குன்ட்டிவாடன் கதை மூலம் கவிப்பித்தன் அறியத் தருகிறார். தோல் தொழில் செய்து வந்த இராணிப்பேட்டை சாயபுகளுக்கும் அருந் ததியர்களுக்கும் ஏற்பட்ட தொடர்பையும் கதையின் போக்கில் சொல்லிச் செல்கிறார் ஆசிரியர்.

'ஏற்படுத்தப்பட்ட' நியதிகளின்படி வாழ்க்கையும் நிகழ்வுகளும் செல்லும் வரையிலும், நடப்புகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் வரையிலும் ஊர் சம்சாரிகள் (சாதி இந்துக்கள்) நல்லவர்களாகவே இருக்கின்றனர். தலித்துகள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நியாயம் கேட்க முனைகையில் அவர்களின் சுயரூபங்கள் வெளிப்படுகிறது. சுந்தரின் சித்தி மகள் பதின் பருவ சிறுமி ரஞ்சிதாவை ஊர் நாட்டாண்மை தம்பி மகன் சுப்பிரமணி பாலியல் வன்கொடுமை செய்ததை தட்டிக் கேட்க சுந்தர் சென்ற போது நாட்டாண்மையின் 'நான் என்னான்னு கேக்கிறேன். நீ போப்பா' என்ற நாட்டாண்மைத்தனம் இன்று வரை அப்படியேதான் இருக்கிறது - மாற்றமின்றி. மீறி சுந்தர் காவல்துறையில் புகார் அளிக்க, அது காவல்துறையினராலேயே சுந்தர் மீதே பணம் பறிக்கச் செய்யும் பழியாக மாற்றப்படு வதும் நாளது தேதி வரையில் நாம் பார்த்துக் கொண்டி ருப்பதே. சம்சாரிகளான கோபால், ராமு போன்றோரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படும் தலித் ராணி களின் இறந்த உடல்கள் ஆலமரங்களின் கிளைகளில் இன்னும் ஆடியபடியே இங்கும் அங்கும் காற்றில் அலைவுறுகின்றன.

பள்ளிக்கூடத்தில் தண்ணீர் கூட யாராவது ஊற்றினால் தான் குடிக்க முடியும் என்ற நிலையும், தான் மட்டும் தனியே அமர வைத்து படிக்க நேர்ந்தது எதனால், அரசு வழங்கும் மதிய உணவு கூட எல்லாருக்கும் வழங்கியது போக மிச்சம் இருப்பதை கடைசியாக தனக்கு வழங்கப்படுவது ஏன், ஏன் ஏன் என்ற சுந்தரின் கேள்விகளுக்கு அவனின் தந்தை குன்ட்டிவாடன் 'எல்லாம் சாமி முடிவு பண்றதாம்' எனும் போது அவனுக்கு அந்த சாமி கெட்ட சாமி என்று தோன்றுவது இயல்பானதே.

சுந்தர் பள்ளி முடிந்து தனியே முள்காடுகள் வழி நடந்து வரும்போது மரத்தின் மீதிருந்து அவன் மீது எறியப் பட்ட மனித மலம் பொதியப்பட்ட பொட்டலத் திலிருந்து வெளிக்கிட்ட குடலைப் பிடுங்கும் சனா தனத்தின் துர்நாற்றம் வேங்கைவயல் வரை நாறுகிறது.

இத்தனை பாதிப்புகளையும் வலிகளையும் தாங்கிக் கல்வியின் வழி மேடேறி வர முனையும் தலித் இளைஞர் களின் பிரதிநிதியாக சுந்தரின் கதாபாத்திரம் வார்க்கப் பட்டுள்ளது. கூடவே இருக்கும் புறக்கணிப்பின் வலி எப்போதும் உடனிருப்பதை அவனது பாத்திரம் வெளிப்படுத்துகிறது - தன்னை ஏன் அலுவலகத்தில் தேநீர், உணவு வாங்கி வரச் சொல்வதில்லை என்று மணியிடம் கூறும் இடத்தில் நாமும் அதிர்ந்தே போகிறோம். 'உனுக்கு ஜாதி எனுக்குச் சோறு ஒரு வழில பாத்தா நாம ரெண்டு பேருமே ஒன்னுதாண்டா' என்று மணி இவனிடம் வர்க்க அடையாளம் தேடும் போது, இருவரின் வலியும் உண்மைதான் என்றாலும், தனது வலி புரையோடிப்போன சர்க்கரை நோயாளியின் ரணத்தைப் போன்று வெளியில் தெரியாதது அது தன்னால் மட்டுமே உணர முடியும் மணிக்குத் தெரியாது என்று சுந்தர் நினைப்பதின் நியாயத்தை வாசிப்பவர் களிடமும் உணர வைத்துள்ளார் கவிப்பித்தன்.

சிறுகச் சிறுகச் சேமித்து ஒரு லாரி பின்னர் முழு பைனான்சில் இன்னொரு லாரி என்று தனது வாழ்நாள் கனவை அடைய முற்பட்டு கடைசியில் தோற்று குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ளும் லாரி ஓட்டுனர் கில்லி பாபு, தனது ஓட்டுநர் பீடி பிரகாசம் போலவே தானும் மரத்தடி அழகிகளிடம் போதுமான பாதுகாப்பு ஏற்பாடின்றி கொண்ட உறவுகளினால் உயிர்க்கொல்லி நோய் பெற்ற குமரேசன், லல்லியையும் ஆறு மாதக் குழந்தையையும் விட்டு விட்டு 48 லட்ச ரூபாய் மதிப்புள்ள கணிணிப் பொருட்களை பம்பாய்க்கு ஒரு நெடுந்தொலைவு லோடு எடுத்துச் சென்று லாரியுடன் காணாமல் போய் பல மாதங்களாகியும் எந்தத் தகவலும் இல்லாமல் போன ஓட்டுநர் குமாரும் கிளி கொத்தரக்கா முன்சாமியும், எந்த வேலையும் பெரிதாகச் செய்யாமல் நுனி நாக்கு ஆங்கிலமும் பந்தாவான ஆடை அலங்காரங்களுடன் பம்மாத்து செய்யும் ஒயிட் காலர் சைமன் குருவிலாவும், வாடகைப் பணத்தையும் வஸ்கட் (முன்பணம்) பணத்தையும் வழியில் வழிப்பறைக் கொள்ளையரிடம் பறி கொடுத்து விட்டு அதை நம்ப மறுத்த முதலாளி யிடம் மாசாமாசம் தவணையாக அத்தொகையைப் பிடித்தம் செய்ய ஒப்புக் கொண்ட பரிதாப லாரி ஓட்டுநர் லோகு, லோடு ஏற்றிப் போகும் வழியிலேயே இரும்புக் கம்பிகளை எடைக்குப் போட்டுப் பணம் பார்க்கும் ஓட்டுநர் குள்ளக் கேசவன், லோடு ஏற்றும்போது ஏற்பட்ட விபத்தால் பைப் இடித்து தலை தொங்கி செத்துப் போய் செத்துப் போன சுவடே தெரியாமலான பஞ்சாப் கிளீனர் என்று லாரிகளின் உலகத்தில் வாழும் பலரை கதையெங்கும் உயிர்ப்போடு உலவவிட்டுள் ளார் கவிப்பித்தன். வாசிக்க வாசிக்க பிரமிப்பும் பரிதாபமும் கோபமும் என பல்லுணர்ச்சிகளும் கலவை கட்டி எழுவது கதாசிரியரின் வெற்றியே.

புதினம் முழுக்க 'தலை காய்ந்தவர்களின்' வர்க்கப் பிரதிநிதியான மணியின் உணவு மீதான ஏக்கமும் ஈர்ப்பும் தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக் கிறது. தான் தனியே சமைத்து சாப்பிடும் போதாகட்டும், புக்கிங்குக்குச் செல்லும் போது கடைகளில் சாப்பிடும் போதும், விடுமுறையில் வீட்டுக்குச் செல்லும் போது சாப்பிடுகையிலும் உணவின் மீதான மணியின் விருப்பு விடாமல் அவனைத் தொடர்கிறது. மணியின் தனி குணாம்சமாக இவ்வுணர்வு அக்கதாபாத்திரத்தை வாசகருக்கு நெருக்கமாக்க உதவுகிறது. பாத்திரப் படைப்பில் கவிப்பித்தனுக்கு இருக்கும் முனைப்பை இப்பாத்திரம் வழி உணரலாம்.




அமைப்பு சாரா உதிரித் தொழிலாளர்களின் வாழ்வி னையும் தலித் வாழ்வின் அங்கமான அருந்ததியரின் வாழ்வியலையும் ஒருங்கே புனைந்து குறிப்பிடத்தகுந்த படைப்பாக்கித் தந்ததில் கவிப்பித்தன் வெற்றியடைந் துள்ளார் என்று உறுதியாகச் சொல்லலாம்.


AFRICA'S CHOICE
AFRICA'S CHOICE
Calcium
Proteines
Vitamines
AFRICA'S CHOICE
Lait Entier en
poudre Instantané
Calcium
Proteines
Vitamines
BELTEXCO


GRENADINE
COLA
LEMON
festa
COLA
vivez plus fun